நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

பக்கங்கள்: [illegible]    Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 வைகாசி 12 செவ்வாய்க்கிழமை (25-05-1993) UTHAYAN –A Lively National Tamil Daily கதிர் 178

# கிளாலிக் கடலில் நேற்றிரவு மோதல்

## பயணிகள் திரும்பினர்

யாழ்ப்பாணம், மே 25

கிளாலிக் கடற்பிரதேசத்தில் நேற்றிரவு கடற்புலிகளுக்கும் ஸ்ரீலங்கா கடற்படையினருக்கும் இடையில் கடும்மோதல் இடம்பெற்றது.

இந்த மோதலினால் கிளாலிக் கடல் பாதை ஊடான பயணிகள் போக்குவரத்து நேற்று பாதிக்கப்பட்டது; ஆலங்கேணிக்குச் செல்வதற்காக கிளாலிக் கரையில் காத்திருந்த பயணிகள் பயணத்தைக் கைவிட்டுத் திரும்பினர்.

நேற்று மாலை 6.30 மணியளவில் பயணிகளுடன் படகுகள் கிளாலிக்கரையில் இருந்து புறப்பட்டு சொற்ப தூரம் சென்ற சமயம்—

பூநகரி ஞானிமடம் பழைய இறங்குதுறை பக்கமாக இருந்து கடற்படையினரின் பீரங்கிப் படகுகள் கிளாலிப் பக்கமாக முன்னேறி வரத் தொடங்கின.

அதை அடுத்து பயணிகள் சென்ற படகுகள் திசை திருப்பப்பட்டு, மீண்டும் கிளாலி நோக்கி திரும்பத் தொடங்கின.

அச் சந்தர்ப்பத்தில் கடற்புலிகள் படகுகளில் முன்னேறிச் சென்று, படையினர் மீது தாக்குதலை தொடுத்தனர்.

இரு தரப்பினருக்கும் இடையில் கடும் சண்டை மூண்டது. சுமார் 30 நிமிடங்கள் வரை சண்டை நீடித்தது.

இந்த மோதலின்போது விடுதலைப் புலிகள் தரப்பில் இருவர் வீரச்சாவு அடைந்தனர். மணியரசன் (சுப்பர்மடம், பருத்தித்துறை), சாஜகான் (மணற்காடு) ஆகிய இருவருமே வீரச்சாவு அடைந்தவர்கள் ஆவர்.

படையினர் தரப்பில் பெரும் இழப்பு ஏற்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது. [ஒ-15]

## இலங்கை செஞ் தலைவர் யாழ். வந்து திரும்பினார்

இலங்கை செஞ்சிலுவைச் சங்க கொழும்பு தலைமையக தலைவர் திரு. டி. டி. அபேசிங்கா உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு நேற்று யாழ்ப்பாணம் வந்து திரும்பினார்.

'குமண' கப்பல் மூலம் நேற்றுக்காலை பருத்தித்துறையை வந்தடைந்த அவர் தனது விஜயத்தை முடித்துக்கொண்டு நேற்று மாலையே அதேகப்பலில் பருத்தித்துறையில் இருந்து புறப்பட்டுச் சென்றார்.

திரு. அபேசிங்காவுடன் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் திட்ட இணைப்பாளர் திரு. பி. தயாளதேவாவும் வந்திருந்தார்.

அச்சுவேலி – ஆவரங்கால் பகுதியில் அண்மையில் இராணுவ நடவடிக்கைகளில் சிக்கி உயிரிழந்த செஞ்சிலுவைச் சங்க யாழ். தலைமையக உபதலைவர் திரு. க. புவனேந்திரனின் உருவப்படத்தை சங்கத்தின் யாழ் தலைமையகத்தில் திரு. அபேசிங்கா திறந்து வைத்தார். கடமையின்போது உயிரிழந்த திரு. புவனேந்திரனின் குடும்பத்தினருக்கு இரண்டு லட்சம் ரூபாவை அப்போது அவர் உதவித் தொகையாக வழங்கினார்.

யாழ். கிளையினால் அச்செழுப் பகுதியில் செயற்படுத்தப்பட்டுவரும் வேலைத்திட்டங்களையும் திரு அபேசிங்கா சென்று பார்வையிட்டார்.

நடமாடும் வைத்திய சேவைக்கு வழங்கப்படும் நிதியை 75 ஆயிரம் ரூபாவிலிருந்து ஒரு லட்சம் ரூபாவாக அதிகரிக்கவும் அவர் இணக்கம் தெரிவித்தார். [அ-5 111]

## கிளாலி படகு சேவை இன்று

யாழ்ப்பாணம், மே 25

கிளாலி பூநகரி படகுச் சேவை இன்றும் வழமையான நேரத்துக்கு நடைபெறும் என்று அறிவிக்கப்படுகின்றது. (த)

## ஷெல் தாக்குதல்

யாழ்ப்பாணம், மே 25

அளவெட்டி வடக்கு சினன்கலட்டி இராணுவ முகாமில இருந்து நேற்று முன்தினம் இரவு 9 மணிக்கு அளவெட்டி சுற்றுப்புறப் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இச்சம்பவத்தை அடுத்து அப்பகுதி மக்கள் இரவைப் பெரும் பீதியுடன் கழித்தனர். [உ-15]

### இரு மாகாணங்களின்

## முதல்வர்கள் தெரிவை ஆட்சேபித்து வழக்கு

தென் மாகாணம் மற்றும் வடமேல் மாகாணம் ஆகியவற்றுக்கு ஐ. தே. கவைச் சேர்ந்தோரை முதலமைச்சர்களாக நியமித்ததை ஆட்சேபித்து உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி, ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி ஆகியவை கூட்டாக இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளன.

வடமேல் மாகாண ஆளுநர் மொண்டேகு ஜயவிக்ரம, தென்மாகாண ஆளுநர் பாக்கீர் மாக்கார் ஆகியோருக்கு எதிராக அரசமைப்பின் 154 (ஊ) (2) பிரிவின் கீழ் இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

இந்த வழக்கில் சாட்சிகள் அழைக்கப்படமாட்டார்கள் என்பதாலும் —

சத்தியக் கடதாசிகள் மற்றும் எழுத்து மூலமான சட்ட வாதங்கள் ஆகியவை மூலமே விசாரணைகள் நடைபெறும் என்பதாலும் — ஓரிரு மாதங்களில் வழக்கின் தீர்ப்பு வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. (உ-[illegible])

### ஜம்முவில்

## 17படையினர் பலி

புதுடில்லி, மே 25

இந்தியாவின் ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் இடம்பெற்ற வெடிவிபத்து ஒன்றில் 17 இந்தியப் படையினர் கொல்லப்பட்டனர். 15 பேர் படுகாயம் அடைந்தனர்.

பாகிஸ்தான் – சீன எல்லைப் பகுதியிலேயே இச் சம்பவம் இடம்பெற்றது. கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இச்சம்பவம் குறித்து நேற்றுப் பி. ரி. ஐ. செய்தி [illegible]

## பூநகரிப் பாதை விவகாரம் முத்தரப்பு உடன்பாடு தேவை

### ஐ நா. தூதரகம் கூறுகிறது

கொழும்பு, மே 25

சங்குப்பிட்டி கடலேரிப் பாதை ஊடாக பொதுமக்கள் பாதுகாப்பாகப் பயணம் செய்வதை உறுதிப்படுத்தும் வகையில் முத்தரப்பு உடன்பாடு ஒன்று காணப்பட வேண்டும் என அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் இலங்கை அரசிடம் ஆலோசனை கூறியுள்ளது.

தகவலறிந்த வட்டாரங்களை மேற்கோள் காட்டி கொழும்பு தமிழ்ப் பத்திரிகை ஒன்று இவ்வாறு நேற்று செய்தி வெளியிட்டிருந்தது.

## மன்னாரில் குண்டு வீச்சு!

கொழும்பு, மே 25

கடந்தவாரம் மன்னார் மாவட்டத்தில் பாடசாலை மற்றும் கிறிஸ்தவ ஆலயம் ஆகியவற்றின் மீது ஸ்ரீலங்கா விமானப்படை விமானங்கள் கண்மூடித்தனமான குண்டு வீச்சுத் தாக்குதலை மேற்கொண்டன என்று வெரித்தாஸ் வானொலி அறிவித்தது.

அவ்வேளையில் பாடசாலையில் பிள்ளைகள் எவரும் இருக்கவில்லை. ஆனால் பொதுமக்கள் பலர் இத்தாக்குதலில் காயமடைந்தனர்.

எட்டுமாதக் கர்ப்பிணி ஒருவர் விமானக் குண்டுவீச்சு அதிர்ச்சியினால் குழந்தை ஒன்றைப் பிரசவித்தார்.

— இவ்வாறு 'வெரித்தாஸ்' மேலும் தெரிவித்தது. [உ-எ]

### மாகாணசபைத் தேர்தலில்

## சிறையில் இருந்தவாறே சந்திரசேகரன் வெற்றி!

கொழும்பு, மே 25

கூட்டுப்படைத் தலைமையகக் குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாகக் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருக்கும்—மலையக மக்கள் முன்னணியின் தலைவர்—பி. சந்திரசேகரன் தடுப்புக் காவலில் இருந்தவாறே நடந்து முடிந்த மாகாண சபைத் தேர்தலில் வெற்றியீட்டியிருக்கிறார்.

மத்திய மாகாணசபைக்கு நுவரெலியா மாவட்டத்திலிருந்து சுயேச்சைக்குழு II இன் சார்பில் போட்டியிட்ட பி. சந்திரசேகரன் 18 ஆயிரத்து 277 விருப்பு வாக்குகளைப்பெற்று மாகாண சபைக்குத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்.

[8 ஆம் பக்கம் பார்க்க]

## சட்டசபையை கலைக்க ஜெயலலிதா முயற்சி!

சென்னை, மே 25

தமிழ்நாடு ஆளுநர் பதவியை திரு. பீஷ்ம நாராயணசிங் நேற்று முன்தினம் ராஜினாமாச் செய்வதற்கு முன்னர் அவரைச் சந்தித்து முதலமைச்சர் ஜெயலலிதா அவரிடம் கூறியது என்ன?

இது பற்றி பி.பி.ஸி. புதிய தகவல் ஒன்றை வெளியிட்டிருக்கிறது.

மாநில சட்டசபையைக் கலைத்துவிட்டு, புதிதாகத் தேர்தலை நடத்துவது பற்றியே ஜெயலலிதா பீஷ்ம நாராயணசிங்குடன் பேசியதாக அ. தி. மு. க. வட்டாரங்களை மேற்கோள் காட்டி பி.பி.ஸி. அறிவித்தது.

உதவியாளர் எவரும் இன்றி ஜெயலலிதா பீஷ்ம நாராயணசிங்குடன் 40 நிமிடங்கள் வரையில் பேசினார்.

ஜெயலலிதா சட்டமன்ற உறுப்பினராக இருக்க முடியாது என உத்தரவிடக் கோரும் மனுவின் மீது தேர்தல் ஆணையாளர் எந்நேரத்திலும் தீர்ப்பு வழங்கக் கூடும்

(8 ஆம பக்கம் பார்க்க)

### சட்டசபையைக் கலைக்காதீர்!

## எதிர்க்கட்சிகளும் ஆட்சி அமைக்க வாய்ப்புத் தருக!

### ஆளுநரிடம் காங்கிரஸ் மனு

சென்னை, மே 25

மாநில சட்டசபையைக் கலைக்கும்படி முதலமைச்சர் ஜெயலலிதா சிபார்சு செய்யக் கூடும் என்று எதிர் பார்த்த தமிழ்நாடு காங்கிரஸ், ஆளுநரிடம் மனு ஒன்றைக் கொடுத்து உள்ளது.

எதிர்க்கட்சிகள் ஆட்சி அமைக்க முடியுமா என்பதை ஆராயாது, அதற்கான வாய்ப்பை எதிர்க்கட்சிகளுக்கு வழங்காமல், ஜெயலலிதாவின் சிபார்சுப்படி சட்டசபையைக் கலைத்து விடக்கூடாது என்று ஆளுநரிடம் சமர்ப்பிக்கப்பட்ட மனுவில் காங்கிரஸ் கட்சி தெரிவித்துள்ளது.

சட்டசபையில் உள்ள 160 அ.தி.மு.க. உறுப்பினர்களில் பாதிக்கு மேல் சட்டசபையைக் கலைப்பதை எதிர்க்கின்றார்கள் அவர்கள் தனிக்குழுவாகப் பிரிந்து காங்கிரஸுடன் கூட்டாட்சி அமைக்கத் தயாராக இருக்கின்றார்கள்.

— இவ்வாறு பி.பி.சி. தெரிவித்தது. (உ-ஓ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லலித்தைக் கொன்றதாகச் சந்தேகிக்கப்படும்

# கொலையாளியை அடையாளம் காட்ட சாட்சியங்கள் இல்லை!

## மரண விசாரணை நடத்திய நீதிவான் தெரிவிப்பு

கொழும்பு, மே 25

முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத் முதலியை கொலை செய்தவராகக் கூறப்படும் நபரை, நிச்சயமாக அடையாளம் காட்டக்கூடிய சாட்சியங்கள் நீதிமன்றம் முன் வைக்கப்படவில்லை.

அதேவேளை—

லலித்தைக் கொன்றதாக சந்தேகிக்கப்படும் நபர் இறந்த சூழ்நிலை பற்றிய தகவல்களும் சரியான முறையில் நீதிமன்றம் முன் வைக்கப்படவில்லை

கொழும்பு மேலதிக நீதிவான் எம். ஏ. சில்வா முன் கண்டவாறு தெரிவித்தார்.

லலித்தைக் கொன்றதாக சந்தேகிக்கப்படும் கந்தையா ரகுநாதன் என்பவரின் மரண விசாரணையின் முடிவில் மேலதிக நீதிவான் இதனைத் தெரிவித்தார்.

இக் காரணங்களுக்காக அத்துலத் முதலியின் மரண விசாரணையை தனியாகவும்—

ரகுநாதனின் மரணவிசாரணையைத் தனியாகவும் நடத்துவது என்று தாம் ஏற்கனவே தீர்மானித்து விட்டதாகவும் மேலதிக நீதிவான் கூறினார்

ரகுநாதனின் மரணம் பற்றிய விசாரணையின் முடிவில்—

ரகுநாதனுக்கு மரணம் எப்படி சம்பவித்தது என்ற தனது தீர்ப்பை இம்மாதம் 27ஆம் திகதி வழங்குவதாகவும் மேலதிக நீதிவான் தெரிவித்தார்.

''சட்ட வைத்திய அதிகாரியின் அறிக்கையின்படி, சயனைட் நஞ்சுதான் அவருக்கு மரணத்தை ஏற்படுத்தியது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது ஒரு கொலையா அல்லது தற்கொலையா என்பது விசாரணைக்கு உரியது'' என்றும் மேலதிக நீதிவான் குறிப்பிட்டுள்ளார்.

[உ-எ]

# வீரப்பன் குழு மீண்டும் கைவரிசை கண்ணிவெடிக்கு 6 பொலீஸார் பலி!

## கர்நாடகத்தில் சம்பவம்

சென்னை, மே 25

சந்தனமரக் கடத்தல்காரனான வீரப்பனின் கோஷ்டியினர் மீண்டும் நேற்று நடத்திய கண்ணிவெடித் தாக்குதலில் கர்நாடக சிறப்புப் பொலீஸ் பிரிவைச் சேர்ந்த ஒரு சப் இன்ஸ்பெக்டர் உட்பட ஆறு பொலீஸார் உயிரிழந்தனர். பொலீஸ் அத்தியட்சகர் ஒருவர் காயமடைந்தார்.

கர்நாடக — தமிழ்நாடு எல்லைக்கு அருகே நேற்று இச் சம்பவம் இடம்பெற்றது

கர்நாடக மாநிலத்தின் ஒண்ணேகால் தாலுகாவில் பாலாறு ஆற்றுக்கு அருகே பொலீஸார் பயணம் செய்த ஜீப் மீது நிலக்கண்ணிவெடித் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும்—

தாக்குதலில் சிக்கி ஜீப் சிதறியதைத் தொடர்ந்து அதில் பயணம் செய்தோரை நோக்கி வீரப்பன் கும்பல் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த மாதம் 9 ஆம் திகதி தமிழ்நாடு பாலாறு காவல் நிலையத்துக்கு அருகில் வைத்து வீரப்பன் குழுவினர் நடத்திய கண்ணிவெடித் தாக்குதலில் பொலீஸ் கொமாண்டோக்கள் பலர் உட்பட 2[illegible] பேர் உயிரிழந்தனர் என்பதும்—

பத்துப் பொலீஸ் கொமாண்டோக்கள் உட்பட சுமார் 30 பேர் வரை படுகாயமடைந்தனர் என்பதும் தெரிந்ததே.

வீரப்பன் குழுவினர் இதுவரை நடத்திய தாக்குதல்களில் 53 பேர் உயிரிழந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

[உ-எ-க]

# சங்குப்பிட்டி - கேரதீவு பாதையை திறக்குமாறு ஆயர் கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 25

சங்குப்பிட்டி - கேரதீவு பாதையை போக்குவரத்துக்கு திறந்துவிட துரித நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்.

யாழ். ஆயர் வண. தோமஸ் சௌந்தரநாயகம், அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்திடம் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

தாம் கொழும்பு சென்றிருந்த போது அங்கு ஐ. நா. தூதரகத்தின் இலங்கை வதிவிடப் பிரதிநிதி கலாநிதி பீற்றர் நிக்கலெஸுடன் பேச்சு நடத்தியதாகவும் —

அச்சமயம் மேற்கண்ட கோரிக்கையை தாம் விடுத்ததாகவும் ஆயர் உதயனுக்குத் தெரிவித்தார்.

குடாநாட்டு மக்களின் நன்மை கருதி பாதை ஒன்றை திறக்க ஏற்பாடு செய்யுமாறு ஜெனிவா தலைமையகத்தில் இருந்து தமக்கு ஆணை கிடைத்துள்ளதாகவும்—

அது சம்பந்தமான அறிக்கை ஒன்றை ஸ்ரீலங்கா அரசிடம் தாம் ஒப்படைத்துள்ளதாகவும்—

அதற்கான பதில் கிடைத்தவுடன், யாழ்ப்பாணம் வந்து விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்த விருப்பதாகவும் — அகதிகளுக்கான ஐ.நா. தூதரக அதிகாரி தம்மிடம் தெரிவித்ததாக ஆயர் மேலும் கூறினார்.

(இ-3)

# நோயாளர் சைக்கிளில் செல்வதை பார்த்து செஞ். தலைவர் கவலை

யாழ். குடாநாட்டு மக்கள் போக்குவரத்து மற்றும் வசதிகள் இன்றி அவலமுறுவதை நேரில் காணமுடிந்தது. நோயாளர்களைக் கூட சைக்கிள்களிலேயே ஆஸ்பத்திரிக்குக் கூட்டிச் செல்லும் நிலை வருத்தத்துக்குரியது.

பொதுமக்களின் இந்தக் கஷ்டங்களை ஓரளவாவது நீக்குவதற்கு செஞ்சிலுவைச் சங்கம் உதவும். இந்த வகையில் என்னென்ன உதவிகளைச் செய்யலாம் என்று யாழ். கிளை இனங்கண்டால் அவற்றைச் செய்வதற்கு நாம் முழு ஒத்துழைப்பும் நல்குவோம்.

இவ்வாறு தெரிவித்தார் இலங்கை செஞ்சிலுவைச் சங்க கொழும்புத் தலைமையகத் தலைவர் திரு டி. டி. அபேசிங்கா.

நேற்று யாழ்ப்பாணத்துக்கு ஒரு நாள் விஜயத்தை மேற்கொண்டு வந்திருந்த திரு. அபேசிங்கா செஞ்சிலுவைச் சங்க யாழ். தலைமையகத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பேசினார்.

டாக்டர் எஸ். சிங்கராயர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில் திரு. அபேசிங்கா மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் உள்ள செஞ்சிலுவைச் சங்கக் கிளைகளில் மிகவும் சிறப்பாக இயங்குவது வடமாகாண யாழ். கிளையே இச்சங்கம் தயாரிக்கும் நலத்திட்ட வேலைகளுக்கு நாம் பெரிதும் உதவுவோம்.

இந்து, பௌத்த மதங்கள் அன்பையும் சமாதானத்தையும் போதிக்கின்றன. அந்த மதங்களைச் சேர்ந்த நாம் எல்லோரும் சகோதரர்கள் அமைதியையும் சமாதானத்தையும் பேணவேண்டியது இரு சமூகங்களினதும் கடமையாகும் — என்றார்.

செஞ்சிலுவைச் சங்க கொழும்புக் கிளையைச் சேர்ந்த திரு பி. தயாள தேவாவும் உரையாற்றினார்.

# ஈழ அகதிகளை அனுப்புவதில் மத்திய அரசு மெத்தனம்

சென்னை, மே 25

தமிழகத்தில் தங்கியுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்புவதில் மத்திய அரசு மெத்தனப் போக்கை கடைப்பிடித்து வருகிறது.

முதலமைச்சர் ஜெயலலிதா இவ்வாறு குற்றஞ்சாட்டி இருக்கிறார்.

மாநிலத்தில் உள்ள எல்லா இலங்கைத் தமிழர்களையும் அவர்களின் தாயகத்திற்குத் திருப்பி அனுப்பிவிட வேண்டும் என்பதே தமது அரசின் கொள்கை என்றும்—

மத்திய அரசின் ஒத்துழைப்பு இதற்கு போதுமானதாக இல்லாததால், கடந்த இரண்டு ஆண்டுகளில் மிகச் சிலரையே இலங்கைக்குத் திருப்பி அனுப்ப முடிந்தது எனறும் அவர் கூறினார்.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்டுள்ள எவரும் காவலில் இருந்து தப்பிஓடவில்லை என்றும் முதலமைச்சர் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

[உ-எ]

## பரீட்சை முடிவு வந்துசேர்ந்தது

ஜி.சீ.ஈ (சாதாரண) தரம் 1990, 1991 ஆம் ஆண்டுகளுக்குரிய சங்கீதம், நடன பாடங்களின் செயன்முறைப்பரீட்சை முடிவுகள் நேற்று யாழ்ப்பாணம் எடுத்துவரப்பட்டன.

(7 ஆம் பக்கம் பார்க்க)

மேல் மாகாணசபைக்கு

# கொழும்பு மாவட்டத்தில் இரு தமிழர்களே தெரிவு

கொழும்பு, மே 25

கொழும்பு மாவட்டத்திலிருந்து மேல் மாகாண சபைக்குத் தெரிவு செய்யப்பட்ட 43 உறுப்பினர்களில் இருவரே தமிழர்கள்.

அவர்கள் இருவரும் ஐ.தே.கவின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றிருக்கின்றனர்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் சார்பில் தெரிவு செய்யப்பட்ட 17 பேரிலும் —

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் சார்பில் தெரிவு செய்யப்பட்ட 10 பேரிலும் தமிழர் எவரும் இல்லை.

ஐ. தே. கவின் சார்பில் தெரிவு செய்யப்பட்ட 16 பேரில் திருமதி வேலம்மா செல்லசாமி ஐந்தாவது இடத்தையும், இராமையா யோகராஜன் 10 ஆவது இடத்தையும் பெற்றுள்ளனர்.

இப்பட்டியலில்போட்டியிட்ட ஜனாதிபதி சட்டத்தரணி ஸி மோதிலால் நேருவின் பெயர் தெரிந்தெடுக்கப்பட்ட ஐ தே. க. உறுப்பினர்களின் பட்டியலில் இல்லை.

கொழும்பு மாவட்டத்தில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் சார்பில் போட்டியிட்ட ஜீவன் குமாரணதுங்க 97 ஆயிரத்து 498 விருப்பு வாக்குகளையும் —

ஐ. தே. க சார்பில் போட்டியிட்ட சுசில் முனசிங்க 60 ஆயிரத்து 312 விருப்பு வாக்குகளையும் —

ஜ. ஐ தே. முன்னணி பட்டியிலில் இடம் பெற்றிருந்த லலித் அத்துலத் முதலிக்கு 1 லட்சத்து 25 ஆயிரத்து 777 விருப்பு வாக்குகளும் அளிக்கப்பட்டிருக்கிறது.

திருமதி செல்லச்சாமிக்கு 32 ஆயிரத்து 360 விருப்பு வாக்குகளும் —

இராமையா யோகராஜனுக்கு 20 ஆயிரத்து 224 விருப்பு வாக்குகளும் கிடைத்தன.

# மாவுடன் வாதுவ கப்பல் ஞாயிறு வந்து சேரும்

யாழ்ப்பாணம், மே 25

கொழும்பு துறைமுகத்தில் தற்சமயம் தரித்து நிற்கும் ''வாதுவ'' கப்பல் திருமலைக்கு சென்று, அங்கு பிரிமா ஆலையில் மாவை ஏற்றிக் கொண்டு எதிர்வரும் 30 ஆம் திகதி பருத்தித்துறைக்கு வந்து சேரும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்கண்ட தகவல் புனர்வாழ்வு அமைச்சிடம் இருந்து நேற்று மாலை கிடைத்ததாக மேலதிக அரச அதிபர் திருமதி ப. திலகநாயகம் போல தெரிவித்தார்.

பருத்தித்துறையில் இருந்து கடந்த வாரம் திருகோணமலை சென்ற ''வாதுவ'' கப்பல் அங்கு ஆயிரத்து 500 மெற்றிக் தொன் மாவை ஏற்றி கொண்டு கொழும்பு சென்றது.

அங்கு மேலும் அரிசி, சீனி போன்ற பொருள்களை ஏற்றிக் கொண்டு பருத்தித்துறைக்கு இக்கப்பல் வரும் என முதலில் திட்டமிடப்பட்டிருந்தது.

ஆனால், கொழும்பு துறைமுகத்தில் தற்சமயம் பொருள்கள் ஏற்றமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதால் மீண்டும் இக்கப்பல் திருமலை சென்று அங்கு மேலும் இரண்டாயிரத்து 500 மெற்றிக் தொன் மாவை ஏற்றிக்கொண்டு பருத்தித்துறைக்குத் திரும்பும் எனத் தெரிவிக்கப்பட்டது.

தற்சமயம் திருகோணமலை நோக்கிச் சென்றுகொண்டிருக்கும் இக்கப்பல் 4 ஆயிரம் மெற்றிக் தொன் மாவுடன் எதிர்வரும் 30 ஆம் திகதி பருத்தித்துறைக்கு வந்து சேரவிருக்கிறது.

[உ-3]

# மூன்று பரீட்சைகளுக்குரிய வினாத்தாள்கள் வந்தன

யாழ்ப்பாணம் மே 25

யாழ்ப்பாணத்தில் இவ்வார இறுதியில் நடைபெறவுள்ள மூன்று பரீட்சைகளுக்குரிய வினாத்தாள்கள் நேற்றுக் கப்பல் மூலம் எடுத்துவரப்பட்டன.

அரசாங்க, உள்ளூராட்சி, கூட்டுத்தாபனங்களுக்கு சிற்றூழியர் தரம் III, தரம் III (அ) ஆகிய இரண்டு பிரிவுகளுக்குமான ஆட்சேர்ப்பு பரீட்சை—

பட்டப்பின் கல்வி டிப்ளோமா எழுத்துப் பரீட்சை (1993)—

பயிலுநர் ஆசிரியருக்கான தொலைக்கல்வி பரீட்சை பகுதி I — ஆகிய பரீட்சைகளுக்குரிய வினாத்தாள்களை பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. துரைதியாகராஜா கொழும்பிலிருந்து நேற்றுக் கொண்டுவந்து சேர்த்தார்.

அரசாங்க உள்ளூராட்சி, கூட்டுத்தாபன ஊழியர்களைச் சேர்ப்பதற்கான பரீட்சை எதிர்வரும் 29 ஆம் திகதி நடைபெறும். அனுமதி அட்டைகள் நேற்றுத் தபால் மூலம் பரீட்சார்த்திகளுக்கு அனுப்பப்பட்டன.

பட்டப்பின் கல்வி டிப்ளோமா எழுத்துப் பரீட்சை எதிர்வரும் 29, 30 ஆம் திகதிகளில் நடைபெறும். அனுமதி அட்டைகளைச் சிரேஷ்ட போதனாசிரியர்கள் கல்வித் திணைக்களத்திலிருந்து சேகரித்து நாளை பரீட்சார்த்திகளுக்கு விநியோகிப்பர்.

பயிலுநர் ஆசிரியர்களுக்கான தொலைக்கல்விப் பரீட்சை எதிர்வரும் 28, 29 ஆம் திகதிகளில் நடைபெறும். அனுமதி அட்டைகளை சிரேஷ்ட போதனாசிரியர்கள் திணைக்களத்திலிருந்து சேகரித்துப் பரீட்சார்த்திகளுக்கு விநியோகிப்பர்.

(அ 5)

தற்கொலை தாக்குதல் நபர்

# ஜனசவியவுக்கு ரூ. 50 ஆயிரம் வழங்க இருந்தாராம்

கொழும்பு, மே 25

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸாவைக் கொலை செய்ததாகக் கருதப்படும் தற்கொலைத் தாக்குதல் நபரான குலசிங்கம் வீரக்குமார், ஜனாதிபதியின் ஜனசவிய நிதியத்துக்கு 50 ஆயிரம் ரூபாவை நன்கொடையாக வழங்கத் திட்டமிட்டிருந்தாராம்.

பிரேமா கொலை குறித்து விசாரணை நடத்திவரும் பொலீஸ் வட்டாரங்கள் இத்தகவலை வெளியிட்டன.

(உ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் ... நூலகம்



கோண்டாவில் கிழக்கு

# அருள்மிகு ஸ்ரீ ஞானப் பழனி முருகன்

# வருடாந்த மகோற்சவ மலர்

(25-05-1993)

# ஞானஒளி வீசி அடியாரின் அல்லல் போக்கும் ஞானப் பழனி முருகன்

கலியுகத்தில் கண்கண்ட தெய்வமாக விளங்கும் முருகப் பெருமான் இனிதமர்ந்து அருள் ஆட்சி செலுத்தும் அற்புத தலங்கள் பலவாகும். வேதமணம் கமழ ஞான ஒளி வீசித் திகழ்ந்து வரும் திருத்தலங்களில் ஒன்று கோண்டாவில் கிழக்கு அருள்மிகு ஞானப்பழனி முருகன் கோயிலாகும்.

1940இல் வேளாண்மை செய்யும் பொருட்டு வேலப்பர் என்பவர் இக்காணியில் குடியேறினார். முட்புதர்களும் பெரும் பற்றைகளும் நிறைந்திருந்தன. சிறிய அளவில் வேளாண்மை செய்தார். இந்நிலையில் இந்தியா சென்ற வேலப்பர் தன் தனிமையைப் போக்க ஒரு துணையோடு வந்தார். அந்தத் துணைதான் இப்போதைய ஞானப்பழனி முருகன். ஒரு சிறு கல் வடிவிலே இங்கு கொண்டு வந்தார். சிறுகுடிசை அமைத்து பழனி முருகனையும் அத்துடன் வைரவப் பெருமானின் சூலம் ஒன்றையும் வைத்து வழிபட்டு வந்தார் நாளடைவில் அயல் மக்களுடன் சேர்ந்து பொங்கல், பூசைகள் செய்யத் தொடங்கினார்.

முதலில் சிறு கட்டடத்தில்

முருகனின் அருட்பிரகாசம் அதிகரிக்க அப்பகுதியில் வீடுகள் எழுந்தன. முருகனின் திருவருளை மக்கள் உணரும்படி சில உண்மை நிகழ்வுகள் இடம்பெற்றன. இரவில் கோயில் பூசை நடப்பது போலவும், மணியடித்துச் சங்கு ஊதுவது போலவும் சத்தம் கேட்கத் தொடங்கியது. இந்நிலையிலே, இவ்வாலய முன்னாள் தலைவரான சிவபதமடைந்த அமரர் பாலசுப்பிரமணியம் அவர்கள். அயலவரின் ஆசியோடு 1976 ஆம் ஆண்டில் சிறு கட்டடத்



தைக் கட்டி, அங்கே வேலையும் சூலத்தையும் பிரதிஷ்டை செய்வித்தார். நித்திய பூசைகள் மட்டுமன்றி நைமித்திய பூசைகளும் நடைபெறலாயின, பிரதிஷ்டை நாளான வைகாசி விசாகத்தை இறுதி நாளாக வைத்து வருடம் தோறும் பத்துத் தினங்கள் அலங்கார உற்சவங்கள் நடைபெறத் தொடங்கின.

## புதிய கட்டடம்

பின்பு புதிய கட்டடம் அமைக்கப்பட்டது. பக்தர்கள் தாமாகவே முன்வந்து விநாயகர், பழனியாண்டவர், ஆறுமுகப் பெருமான், முத்துக்குமாரசுவாமி, வயிரவர், சண்டேஸ்வரர் போன்ற பரிவார மூர்த்திகளையும் மனமுவந்து பிரதிஷ்டை செய்தனர். பின்பு 1986 ஆம் ஆண்டு பூசநன் னாளில் புதிய கட்டடத்திற்கு அத்திபாரக்கல் நாட்டினார்

## ஆலய பரிபாலன சபையினர்

கள். அருட்கவி வினாசித்தம்பி ஆசிரியர், சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோரின் நல்லாசியுடன் அடிக்கல் நாட்டப்பட்டது. புதிய கட்டடம் அமைய நன்கு பாடுபட்டவர் அமரர் பாலசுப்பிரமணியம் ஆவார். ஆனால் நாட்டு நிலமை காரணமாக கட்டட வேலைகள் தாமதமடைந்தன. பின்பு பரிபாலன சபையின் தீவிரமுயற்சியால் 09-09-1992 இல் கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது. 23-05-1993 இல் கொடித்தம்பம் அமைக்கப்பட்டு தம்பப்பிள்ளையார் பிரதிஷ்டை இடம்பெற்றது. இத்தினத்தில் நல்லை ஆதீன முதல்வர், செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, அருட்கவி வினாசித்தம்பி ஆகியோரின்

(5 ஆம் பக்கம் பார்க்க)


பலவினை தீர்க்கும் பழனி ஆண்டவா போற்றி!

சோதி வர்த்தக மாளிகை
புகையிரத நிலைய வீதி,
கோண்டாவில் கிழக்கு.

சிவா பிறதேர்ஸ்
பலசரக்கு
கட்டடப் பொருள்
விற்பனை நிலையம்
பலாலி வீதி,
கோண்டாவில்.

இராசமணி களஞ்சியம்
பலசரக்கு வியாபாரம்
கோண்டாவில் கிழக்கு

ஆரிய பகவான்
சைவ உணவகம்
பலாலி வீதி,
கோண்டாவில்.

தில்லை நடேசன் ஸ்ரோர்ஸ்
பலாலி வீதி,
கோண்டாவில்.

தயாளன் விவசாய மாளிகை
விவசாய, இரசாயன
பொருள்கள் விதைகள்
விற்பனையாளர்
பலாலி வீதி,
கோண்டாவில்.

தவம் களஞ்சியம்
தவம் அன் சன்ஸ்
பலாலி வீதி,
கோண்டாவில்.

சிறி குமரன் அரிசி ஆலை
திறமான அரிசி,
தரமான விலை
பலாலி றோட்,
கோண்டாவில்.

சுதா எரிபொருள் வர்த்தக நிலையம்
பலாலி வீதி,
கோண்டாவில்.

என். எஸ். திருநாவுக்கரசு அன் சன்ஸ்
விவசாயக் களஞ்சியம்
பலாலி வீதி,
கோண்டாவில்.

A.R.S. ஸ்ரோர்ஸ்
பலசரக்கு வியாபாரம்
புகையிரத நிலைய வீதி,
கோண்டாவில்.


## மகோற்சவ கால நிகழ்ச்சிகள்

**25 — 05 — 93** செவ்வாய்—
முற்பகல் 10-00 கொடியேற்றம்
மங்கள இசை: R. S சுவாமிநாதன் குழுவினர்
V. K. கானமூர்த்தி, பஞ்சமூர்த்தி குழுவினர்
இன்னிசை: பார்வதி சிவபாதம் குழுவினர்
வில்லிசை: சின்னமணி குழுவினர்- வள்ளி திருமணம்

**26 — 05 — 93** புதன் — இரண்டாம் திருவிழா
மங்கள இசை: R. S. சுவாமிநாதன் குழுவினர்
N K. பத்மநாதன் குழுவினர்

**27 — 05 — 93** வியாழன் — மூன்றாம் திருவிழா
கயிலாய வாகனம் வெள்ளோட்டம்: பிற்பகல் 3 30 மணி
மங்கள இசை: N. K. பத்மநாதன் குழுவினர்
R. S. சுவாமிநாதன் குழுவினர்

**28 — 05 — 93** வெள்ளி — நான்காம் திருவிழா
R. S. சுவாமிநாதன் குழுவினர்

**29 — 05 — 93** சனி — ஐந்தாம் திருவிழா
மங்கள இசை: R. S. சுவாமிநாதன் குழுவினர்

**30 — 05 — 93** ஞாயிறு — ஆறாம் திருவிழா (மாம்பழத் திருவிழா)
மங்கள இசை: R. S. சுவாமிநாதன் குழுவினர்

**31 — 05 — 93** திங்கள் — ஏழாம் திருவிழா (கயிலாய வாகனம்)
மங்கள இசை: R. S. சுவாமிநாதன் குழுவினர்
N. K. பத்மநாதன் குழுவினர்
V. K. கானமூர்த்தி, பஞ்சமூர்த்தி குழுவினர்
இன்னிசை: சாந்தன் இசைக் குழுவினர்

**01 — 06 — 93** செவ்வாய்—எட்டாம் திருவிழா (சப்பறம்)
மங்கள இசை: R. S சுவாமிநாதன் குழுவினர்
N. K. பத்மநாதன் குழுவினர்

**02 — 06 — 93** புதன்—தேர்த் திருவிழா
வசந்த மண்டபப் பூசை மு. ப. 8-00
தேர் வீதிவலம் வருதல் மு. ப. 9-00
தேரிலிருந்து பச்சை சார்த்தி
வசந்தமண்டபத்துக்கு எழுந்தருளல் மு.ப. 11-30
மகேஸ்வரப் பூசை ந. ப. 12-30

**03 — 06 — 93** வியாழன்—தீர்த்தோற்சவம் மு.ப. 9-30
மங்கள இசை: R. S. சுவாமிநாதன் குழுவினர்

**04 — 06 — 93** வெள்ளி — திருக்கல்யாணம் பி. ப. 6-00
மங்கள இசை: R. S சுவாமிநாதன் குழுவினர்

**05 — 06 — 93** சனி வைரவர் சாந்தி பி. ப. 6-00
மங்கள இசை: R. S சுவாமிநாதன் குழுவினர்

தினமும் 25-05-1993 — 05-06-1993 வரை
மகோற்சவப் பேருரை
பொருள்: பெரியபுராணம்
திரு. ஆறுதிருமுருகன் B A. (கம்பன் கழகப் பேச்சாளர்)

(25804)

## 2ஆம் வருட நினைவஞ்சலி



தோற்றம்: 05 — 04 — 1907

மறைவு: 17 — 05 — 1991

**கந்தசாமி ஞானசுந்தரம்**

திதி: 25 — 05 — 1993

இறைபதம் எய்திய எமது குடும்பத் தலைவனின் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திக்கும்;

—குடும்பத்தினர்.

461, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

(25763)

## கும்பாபிஷேகம்

அராலி, மே 25

அராலி ஆவரம்பிட்டி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தானத்தின் மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 02 - 06 - 93 புதன்கிழமை பகல் 11-03 தொடக்கம் 12-53 வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் நடைபெறும்.

கும்பாபிஷேகத்தின் போது நல்லை ஆதீன முதல்வர் ஆசியுரை நிகழ்த்துவார்; சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி வாழ்த்துரையும், யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் கலாநிதி ப. கோபாலகிருஷ்ண ஐயர் சிறப்புரையும் நிகழ்த்துவார்கள்.

(க-12-161)


G.A.Q -94
Ist in Com.

யாழ். பல்கலைக்கழகம்
(வெளிவாரி)

இப் பாடநெறிக்கான விரிவுரைகள் ஆரம்பமாகி விட்டன.

விவரங்களுக்கு:
எஸ். அருள்நங்கை
புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம்சந்தி, யாழ்ப்பாணம்.

(சி-4771)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

அழகிய வெள்ளை நிற பொமனேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல. 48/1, முதலாம் ஒழுங்கை, (ஜங்கரன் விளையாட்டுக் கழக வீதி) பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். (25794)

## இலவச திருமண சேவை

32 வயது, பரணி, செவ்வாய் 7, படித்த பெண்ணுக்கு அரச கூட்டுத்தாபன மணமகன் தேவை. சீதனம் உண்டு. மணமக்களுக்கு தொடர்பு: ஞாயிறு காலையில். இலவச திருமண சேவை, விமலா, நாச்சிமார் கோவிலடி. (25801)

## வேப்பெண்ணெய்

வேப்பெண்ணெய்க் கிருமி நாசனி உங்கள் தோட்டப் பயிர்களையும், எலுமிச்சை, தோடை இனங்களை அழிக்கும் பூச்சிகளையும், நோய்களையும் முற்றாகக் கட்டுப்படுத்தவல்லது. இதனை மருந்துத் தேவைகளுக்கும் பாவிக்கலாம். பாவித்து பயன் பெறுங்கள். எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி, 34, ஆடியபாதம் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (6204)

## சஞ்சிகை

புது ஆராய்ச்சி (New Research) மாதாந்த சஞ்சிகை 01-07-93இல் வெளியிடப்பட உள்ளது. தேவையானோர் யோ. சசிதரன், 138, திருமகள் வீதி, அரியாலை என்ற விலாசத்தில் கடிதமூலம் தொடர்பு கொள்ளலாம்: விலை ரூபா 20 மட்டுமே. வீடுகளில் நேரில் விநியோகிக்கப்படும். அப்போது பணத்தைச் செலுத்தலாம். (25803)

## பெயர் மாற்றம்

யாழ். நகரை வசிப்பிடமாகக் கொண்ட ''கணேசா'' ஆகிய எனது பெயர் K.V. Kanesalingam என மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை சகலருக்கும் அறியத்தருகிறேன். K.V. Kanesalingam, 398, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (25387)

## குத்தரிசி விலை வீழ்ச்சி

உரும்பராய், மே 25

குத்தரிசி விலை மேலும் குறைந்துள்ளது. இலோ 26 ரூபாவாக தற்போது விற்பனை செய்யப்படுகிறது. (இ-154)

---

# O/L 93
## புதிய பிரிவு

பகல் நேர, மாலை நேர வகுப்புகள்

ஆரம்பம்:
**25 — 05 — 1993**

★ ஆண்டுகள் 9, 10க்குரிய மாலை நேர வகுப்புக்களும் நடைபெறுகின்றன

## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.
(சி-4772)

---

# நிரு
## ரியூசன் சென்ரர்

கோண்டாவில்.

ஐந்தாம் ஆண்டு
புலமைப் பரிசில்
பரீட்சை

## 1993
## வினா-விடை

வகுப்பு
(Paper Class)

ஆரம்பம்:
01-06-1993

கணிதம்
நயினை S.S. பிள்ளை
தமிழ்
திரு. S. சுந்தரலிங்கம்
(சி-4763)

---

## அஸ்ரன் கல்வி நிலையம்

ஆரம்பிக்கும்

# A/L விஞ்ஞானப் பிரிவு - 95

யாழ். நகரின் முன்னணி ஆசிரியர்களின்
இணைந்த சேவை

**ஆரம்பம்: 05 - 06 - 1993**
முற்பகல் 8-00 மணி

| | |
|---|---|
| பௌதீகவியல் / பிரயோககணிதம் | — திரு. R. மணியம் |
| விலங்கியல் | — திரு. S. செல்வநாயகம் |
| தூயகணிதம் | — திரு. S. ஈஸ்வரதேவன் |
| இரசாயனவியல் | — திரு. K. ஜெயஈஸ்வரன் |
| தாவரவியல் | — பிரபல ஆசிரியர் |

★ அச்சடித்த பாடக்குறிப்புகள்
★ ஒவ்வொரு வகுப்பிலும் 100க்குட்பட்ட மாணவர்கள்

உறுதியான கல்வியைப் பெற

## அஸ்ரன் கல்வி நிலையம்

101/10, கிராண்லி வீதி, யாழ்ப்பாணம்.
(மக்கள் வங்கிக்கு அருகில்)
(இ-4767)

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர்
**வீரகத்தி கணபதிப்பிள்ளை வல்லிபுரம்**

| பூவுலகில்: | விண்ணுலகில்: |
|---|---|
| 26 — 01 — 1926 | 24 — 04 — 1993 |

அகத்தொளிர் தலைவரென அருஞ்சா-
தனை பலவாய்ப்
புகழுடல் நிறுவிவிட்டுப் புகுதியோ எமைப் பிரிந்தே!
மாதமொன்று ஆகுதையா மகிழ் முகத்தில்-
நாம் விழித்துப்
பாதமது தனிலெமது பரிந்துருகும் அஞ்சலிகள்!

அமரரின் அந்தியேஷ்டிக் கிரியைகளும் சபிண்டீகரணமும் இன்று 25 - 05 - 93 இல் நிகழும். அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

-அமரரின் குடும்பத்தினர்.

'வேல் அகம்'
குருக்கட்டு,
கரணவாய் தெற்கு,
கரவெட்டி.
(6193)

---

# விவசாயிகளுக்கு குறைந்த விலையில் வாளி விநியோகம்

அரலி, மே 25

கொழும்பிலிருந்து தருவிக்கப்பட்ட வாளிகள் குறைந்த விலையில் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படவுள்ளன. யாழ் மாவட்ட கமநல சேவை திணைக்களம் இதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

தொல்புரம் கமநல சேவை நிலையப் பகுதியில் உள்ள விவசாயிகள் வாளி ஒன்றுக்கு முற்பணமாக ரூபா இருநூறை கமநல சேவை நிலையத்தில் செலுத்திப் பதிவு செய்து கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்படுகின்றது

இதேவேளை —

நாற்றுப் போடப்பட்ட நல்லின தென்னம்பிள்ளைகளும் கமநல சேவை நிலையத்தில் விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்படுவதாக தெரிவிக்கப்பட்டது. (த-12)

# மார்பு நோய் சிகிச்சை நிலையம் இடமாற்றம்

பருத்தித்துறை வீதி யாழ்ப்பாணத்தில் இயங்கி வந்த மார்பு நோய் சிகிச்சை நிலையம் சென்ற புதன்கிழமை முதல் இடம் மாற்றப்பட்டுள்ளது.

யாழ். போதனா வைத்திய சாலைக்கு முன்பாக மணிக்கூட்டு வீதியில் உள்ள இலக்கம் 16, கட்டடத்தில் அது தற்போது இயங்குகிறது. (இ-162)

---

தென் மட்டுவில் வேரற்கேணி
ஸ்ரீ கந்தசுவாமி திருக்கோவில்

# கொடியேற்றம்

இன்று (25 — 05 — 1993) செவ்வாய் நடைபெறும்.

மஹோற்சவ குரு: கிரியா கலாமணி சிவஸ்ரீ
ச. சோமாஸ்கந்தக் குருக்கள்

மாலை 6 மணிக்கு சிறப்புச் சொற்பொழிவு

நிகழ்த்துபவர்: நல்லைக் குருமணியின் சிஷ்யன் கான கதாவாரிதி கந்தர்மடம் பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்தசர்மா

விடயம்: ''முருகோதயம்''

— அன்புடன் அனைவரையும் அழைக்கின்றோம் —

- ஆலய பரிபாலன சபை.

(25793)

---

# ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வன்
**இராஜதுரை ராஜேந்திரபோஸ்**
(ராஜன்)
(யாழ். சென்ஜோன்ஸ் கல்லூரி, உயர்தர மாணவன்)

| அன்னையின் மடியில்: | அரக்கர் அழிப்பில்: |
|---|---|
| 03—12—1969 | 25—05—1987 |

சிரித்த முகத்துடன் சிங்காரக் கதை பேசிய நீர்!
சிட்டாய்ப் பறந்து சென்று,
ஆறாண்டு முடிந்தாலும் உம் நினைவுகளால்
நாள் தோறும் எம் இதயம் வேதனையால் துடிக்கிறது!
உமது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

உமது நினைவால் உருகும்;
அப்பா, அம்மா, சுபாஸ் அண்ணா,
கண்ணா (ஜேர்மனி), தங்கை, தம்பி,
உறவினர்கள், நண்பர்கள்.

சறோஜா தங்கமாளிகை,
சமிகத்தானை,
சாவகச்சேரி.
(25796)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்



## கூட்டுறவு விழாவை ஒட்டி மாணவரிடையே போட்டி

எதிர்வரும் ஜூலை முதல் வாரத்தில் நடைபெறவுள்ள இந்த ஆண்டுக்கான சர்வதேச கூட்டுறவு தினவிழாவை யொட்டி யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபை யாழ். மாவட்டத்தில் கல்வி பயிலும் மாணவர்களிடையே போட்டிகளை நடத்தவுள்ளது. இப் போட்டிகள் ஐந்து பிரிவுகளாக நடத்தப்படவுள்ளன.

போட்டிகளில் பங்கு பற்ற விரும்புவோர் விண்ணப்பப் படிவத்தை தயாரித்து கல்லூரி அதிபரூடாக அந்தந்த கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளருக்கு 10 - 06 - 93 க்கு முன் அனுப்பி வைத்தல் வேண்டுமென தெரிவிக்கப் பட்டுள்ளது.

இப்போட்டிகள் முதலில் கல்விக் கோட்டங்களில் நடத்தப்படும். ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடத்தைப் பெறுபவர்கள் மாவட்ட மட்டப் போட்டியில் பங்கு பற்ற அனுமதிக்கப்படுவர்.

மாணவர்களிடையே பேச்சு கட்டுரைப் போட்டிகள் நடத்தப்பட உள்ளன. ஒரு பாடசாலையில் இருந்து எத்தனை மாணவர்களும் போட்டிகளில் பங்கு பற்றலாமெனவும் ஒரு மாணவன் பேச்சு, கட்டுரை ஆகிய இரு போட்டிகளிலும் பங்கு பற்றலாமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபை அதன் அங்கத்துவ சங்கங்களின் அங்கத்தவர்கள், பணியாளர்களிடையேயும் இவ் விழாவையொட்டி போட்டிகளைநடத்த தீர்மானித்துள்ளது.

இப் போட்டிகளும் முதலில் கோட்ட மட்டத்தில் நடத்தப்பட்டு வெற்றி பெறும் போட்டியாளர்களிடையே மாவட்ட மட்டத்திலும் நடத்தப்படும். (இ-162)

### வாராந்த விடுமுறை

குருநகர் பகுதி வர்த்தக நிலையங்களும் வாராந்த விடுமுறைக்காக ஒன்றரை நாள் மூடப்படும்.

குருநகர் வர்த்தக சங்கம் இம் முடிவை எடுத்துள்ளது.

இதன்படி சனிக்கிழமைகளில் 2 மணிக்குப் பின்னரும் ஞாயிற்றுக்கிழமைகளில் முழு நாளும் வர்த்தக நிலையங்கள் அடைக்கப்படுமென தெரிவிக்கப் படுகிறது. (த 51)

"செப்ரிசீமியா" நோய் காரணமாக

## கடந்த பத்து நாட்களில் 6 குழந்தைகள் மரணம்

யாழ்ப்பாணம், மே 25

யாழ். குடாநாட்டின் தற்போது 'செப்ரிசிமியா' என்ற ஒருவகை நோயினால் பத்து வயதுக்கு உட்பட்ட சிறுவர்கள் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

இந்த நோயினால் பாதிக்கப் பட்ட ஆறு குழந்தைகள் கடந்த பத்துத் தினங்களில் யாழ். போதனா வைத்திய சாலை குழந்தைகள் வார்ட்டில் இறந்துள்ளன.

இந்த நோய்க்கு இன்னும் 25 குழந்தைகள் தற்போது சிகிச்சை பெற்று வருகின்றன. இக் குழந்தைகளில் ஐவர் மிக மோசமாகப் பாதிக்கப் பட்டிருப்பதாகத் தெரிவிக்கப் படுகிறது.

காய்ச்சல், வலிப்பு, இரத்தத்துடன் கூடிய வாந்தி ஆகியவை இந்த நோயின் அறிகுறிகளாகும்.

இந்த நோய் தென்மராட்சிப் பகுதியிலும் வேகமாகப் பரவி வருகிறது என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-17)

### நோயாளருடன் குமண

கொழும்பில் சிகிச்சை பெறச் சென்ற ஒரு தொகை நோயாளர்களை திருகோண மலையில் இருந்து ஏற்றிக் கொண்டு 'குமண' கப்பல் நேற்று பருத்தித்துறை துறை முகத்தை வந்தடைந்தது.

கொழும்பில் சிகிச்சை பெறவுள்ள 75 நோயாளர்களுடன் "குமண" கப்பல் நேற்று மாலையே திரும்பிச் செல்ல ஏற்பாடாகியிருந்தது.

### பாஸ்போர்ட் கறுப்பு-வெள்ளை புகைப்படம்

பாஸ்போர்ட்களுக்கு எதிர்காலத்தில் விண்ணப்பிப்போர் கறுப்பு-வெள்ளைப் புகைப் படங்களையே விண்ணப்பப் பத்திரங்களுடன் சமர்ப்பிக்க வேண்டும்.

இப்படி குடியகல்வு, குடிவரவு கட்டுப்பாட்டாளர் பணித்திருக்கிறார்.

இனிமேல் வர்ணப் புகைப் படங்கள் ஏற்றுக் கொள்ளப் பட மாட்டாது என்றும் அவர் அறிவித்திருக்கிறார்.

வர்ணப்படங்கள் மூலம் பல மோசடிகள் இடம்பெறுவது கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்தே இப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. [இ-எ]

தேசிய வீடமைப்பு அதிகார சபை

## யாழ். மாவட்டத்துக்கு ரூ. 24 லட்சம் ஒதுக்கீடு

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை இந்த ஆண்டு யாழ். மாவட்டத்துக்கான தூய மானியமாக 24 லட்சத்து 10 ஆயிரம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது.

இதில் பிரதேச சபைகளுக்கு 13 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும், நகர சபைகளுக்கு 6 லட்சத்து 60 ஆயிரம் ரூபாவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இம் மானியம் மிக மிக அவசியமான வீட்டுத் தேவையுள்ள வறிய மக்களுக்கே வழங்கப்படும். சனசமூக நிலையங்கள், ஐக்கிய நாணய சங்கங்கள் போன்ற அமைப்புக்களால் தெரிவு செய்யப்பட்டு பிரதேச வீடமைப்புக் குழுவால் முன்னுரிமைப் படுத்தப்பட்டவர்களுக்கே இந்த மானியம் வழங்கப்படும். இவர்களின் பெயர் விவரங்கள் பிரதேச செயலகங்கள், பிரதேச சபைகள் மற்றும் பொது இடங்களில் உள்ள விளம்பர பலகைகளில் மக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பான ஆட்சேபனைகள் ஏதும் இருந்தால் அவற்றைத் தெரிவிக்கலாம் என்றும் —

தகுதி வாய்ந்தவர்கள் நிவாரணத்தைப் பெற்றுக் கொள்ள இது உதவும் என்றும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் யாழ். மாவட்ட முகாமையாளர் திரு. த. பூ. முருகையா தெரிவித்துள்ளார்.

### ஞானஒளி...

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆசியுரைகளுடன் விழா சிறப்பாக நடைபெற்றது. பல அடியார்கள் கலந்துகொண்டார்கள்.

துயரமும், துன்பமும், அல்லலும், அவலமும் நிறைந்த உலக வாழ்க்கையில் தம்மை எல்லாம் காத்து இரட்சிக்கும் படி பழனி முருகனை வேண்டிப் பலரும் வழிபடும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். பழனி முருகன் அற்புத முருகன் என்றால் மிகையாகாது. தீராத நோய்களைத் தீர்க்கும் சக்தியும், வாய் பேசாப்பிள்ளையைப் பேச வைத்தமையும் எம்பெருமானின் அற்புதத்திற்குச் சான்றுகள்.

இன்று நடைபெறும் கொடியேற்ற விழாவுடன் ஆரம்பமாகும் ஞானப்பழனி முருகன் மஹோற்சவங்களில் அடியார்கள் யாவரும் கலந்து முருகப் பெருமானை வணங்கி உளம் நெகிழ்ந்து அல்லல் யாவற்றையும் அகற்ற வழி தேடுவார்களாக. ★

ஏழாலையில் அழியும் நிலையிலுள்ள

## வாழைத் தோட்டத்துக்கு மண்எண்ணெய் தருக

### அரச அதிபரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 25

ஏழாலையில் வாழைப் பயிர்ச் செய்கையில் ஈடுபடுவோருக்கு மண்எண்ணெய் வழங்குமாறு ஏழாலை மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கம் யாழ். அரசாங்க அதிபரைக் கோரியுள்ளது.

இம்மாதம் 19ஆம் திகதி நடைபெற்ற மேற்படி சங்க நிர்வாக சபைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமையவே இக்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இராணுவ வேலிக்கு சமீபமாக அமைந்துள்ள இப்பகுதியில் கடந்த மூன்று ஆண்டுகளாக இருந்துவரும் பதற்ற நிலை காரணமாகவும் —

எரிபொருள் தடையாலும் வாழைத் தோட்டங்கள் அழிந்து வருகின்றன என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (இ)

## இன்றைய எமது சமூக மாற்றத்திற்கு பெண்களின் பங்களிப்பு அவசியம்

### கவிதை நூல் வெளியீட்டு விழாவில் பேச்சு

யாழ்ப்பாணம், மே 25

உலகம் குறித்த புதிய பார்வையும், தரிசனமும் கவிஞர்களுக்கு இன்றியமையாதவை. இன்றைய எமது சமூக மாற்றத்துக்கு இளம் பெண்களின் பங்களிப்பு அவசியமானது.

செல்வி ஆதிலட்சுமி பசுபதியின் [தூயவள்] "நிமிர்வு" கவிதைத் தொகுதி வெளியீட்டு விழாவில் யாழ். பல்கலைக்கழக நுண்கலைத் துறைத் தலைவர் பேராசிரியர் கா. சிவத்தம்பி உரை நிகழ்த்துகையில் இவ்வாறு கூறினார்.

இந்த நிகழ்ச்சி விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பு வெளியீட்டுப்பிரிவைச் சேர்ந்த செல்வி டியூ தலைமையில் கடந்த திங்கட்கிழமை கல்வியங்காடு இளங் கலைஞர் மன்ற கலா மண்டபத்தில் இடம்பெற்றது.

பேராசிரியர் கா. சிவத்தம்பி மேலும் கூறியதாவது:

ஓர் ஆக்க எழுத்தாளன் என்றைக்காவது ஒரு கவிதையை எழுதியே இருப்பான். ஏனெனில் ஓர் உந்துதல் அவனிடம் நிச்சயம் ஏற்படும். போராளிகளுக்கு பயிற்சி எவ்வாறு முக்கியமோ அது போன்று எழுத்தாளர்களுக்கும் பயிற்சிகள் தேவை. விடுதலைக்கும் சமூகத்தின் புரட்சிகர மாற்றத்திற்குமாக இயங்கும் எந்த ஓர் இயக்கமும் எழுத்தாளர்களுக்குப் பயிற்சி அளிக்கும். இதை நான் பல நாடுகளில் நேரடியாக அவதானித்துள்ளேன்.

ஆண்டாள், ஔவையார் போன்ற பல பெண்கள் தமிழ்க் கவிதை வரலாற்றில் முக்கிய இடம் பெற்றுள்ளனர்.

இன்று யாழ்ப்பாணத்தில் தமது அனுபவங்களை வெளிப் படுத்தும் வகையில் ஒரு பெண்ணினால் இக்கவிதை நூல் வெளிவந்துள்ளது. கவிதைக்குரிய வன்மையான ஓட்டம் நூலில் காணப்படுகிறது — என்றார்.

செல்வி டியூ தனது தலைமை உரையில் —

எமது மண்ணில் பெண் எழுத்தாளர்கள் மிகவும் குறைவு. பெண்கள் இன்று கல்வியில் காட்டும் ஆர்வம் போன்று எழுத்துத்துறையிலும் ஆர்வமுடன் ஈடுபடுவதன் மூலம் எமது இனத்தின் விடிவுக்கு ஏற்ற இலக்கியங்களைப் படைக்க வேண்டும் என்று கூறினர்.

நூலை வெளியீட்டுப் பேசிய விடுதலைப் புலிகள் பிரமுகர் திரு தேவர் —

இன்றைய காலத்தின் தேவையைக் கருத்தில் கொண்டு இலக்கியங்களைப் படைக்காது ஒதுங்கிக்கிடக்கும் முதுபெரும் எழுத்தாளர்கள் பலர் உண்டு. இந்த நிலையில் விடுதலை உணர்வையும் போராட்டத்தின் அவசியத்தையும் வலியுறுத்திப் பல புதிய படைப்புக்கள் வெளியாகின்றன என்றால் அதற்கு இளம் எழுத்தாளர்களின் மொழிப்பற்றும் தேசபக்தியுமே காரணம். ஈழத்தின் இலக்கிய வளர்ச்சிக்கு எமது தேசியத் தலைவர் காட்டும் அக்கறை அதற்குப்புத்துயிரூட்டும்— என்றார்.

திரு. தேவரிடம் இருந்து நூலின் முதல் பிரதியை "சாளரம்" ஆசிரிய பீடத்தைச் சேர்ந்த திருமலை யோகேந்திரன் பெற்றுக் கொண்டார் திருமதி சாவித்திரி அத்துவிதானந்தன் மங்கள விளக்கேற்றி நிகழ்ச்சியைத் தொடக்கி வைத்தார்.

திருமதி சி. ஆதிலட்சுமி மற்றும் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த செல்வி சுதாமதி இ. பூங்குழலி ஆகியோரும் பேசினார்கள் நூலாசிரியர் செல்வி ஆதிலட்சுமி பசுபதி (தூயவள்) நன்றியுரை வழங்கினர். (ஒ-111)


வண். வடமேற்கு
கோட்டையம்பதி அருள்மிகு
ஸ்ரீ சிவசுப்பிரமணியர் தேவஸ்தானம்
மஹோற்சவ விஞ்ஞாபனம்


25 - 5 - 93 கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி
04 - 6 - 93 வரை சிறப்பாக நடைபெறவுள்ளது.

மஹோற்சவ காலத்தில்
(25-5-93 — 4-6-93)
தினமும் இரவு
8 மணி — 9 மணி வரை

கம்பன் கழக
அமைப்பாளர்

திரு. இ. ஜெயராஜ்
அவர்களினால்

பெரிய புராண
சொற்பொழிவு
நடைபெறவுள்ளது.



அத்துடன் இந்து இளைஞர் மன்றத்தால் 1 - 6 - 93 அன்று சமய அறிவுப் போட்டியும் நடைபெறவுள்ளது.

அடியார்கள் அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்.

தர்மகர்த்தா சபை
யாழ். வண்ணை கோட்டையம்பதி,
ஸ்ரீ சிவசுப்பிரமணியர் தேவஸ்தானம்.

(25807)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகள் விவகாரம்: தி.மு.க. போன்றே அ.தி.மு.கவும் நடக்கிறது

## மூப்பனார் கூறுகிறார்

கொழும்பு, மே 25

விடுதலைப் புலிகள் விஷயத்தில் முன்னர் தி.மு.க. அரசு கடைப்பிடித்து வந்த போக்கையே தான் அ.தி.மு.க. அரசும் தற்போது கடைப்பிடித்து வருகிறது.

காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரான திரு. ஜி. கே. மூப்பனார் முன்கண்டவாறு தெரிவித்திருக்கிறார்.

சிவகங்கையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர்,

கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக தமிழ் நாட்டை ஆட்சி செய்து வந்த இந்திரா காங்கிரஸ் அல்லாத அரசுகளின் செயல்களுக்கு மத்திய அரசின் மீது பழிபோடப்படுகின்றது என்றும் தெரிவித்தார். (இ எ)

# பாதுகாப்பு நிதிக்கு ரூ. 30 கோடி

கொழும்பு, மே 25

1990 ஜூன் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்ட தேசிய பாதுகாப்பு நிதிக்கு இதுவரை 29 கோடியே 60 லட்சம் ரூபா சேர்ந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-எ)

# சவான் கூறியது உண்மையே என ஜெயலலிதா மீண்டும் வலியுறுத்து

சென்னை, மே 25

விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் பேச்சுகள் நடத்தும் வாய்ப்புகளை ஆராயுமாறு மத்திய உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் என்னிடம் கேட்டுக் கொண்டார் என்று நான் கூறியதை மீண்டும் வலியுறுத்துகின்றேன்.

முதலமைச்சர் ஜெயலலிதா நேற்று முன்தினம் வெளியிட்ட பதில் அறிக்கையில் முன் கண்டவாறு தெரிவித்திருக்கிறார்.

விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் பேச்சுகள் நடத்துவது குறித்து ஆராயும்படி தாம் கேட்டுக்கொண்டதாக முதலமைச்சர் ஜெயலலிதா கூறியதை மறுத்து உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் நேற்று முன்தினம் அறிக்கை ஒன்றை விடுத்தது தெரிந்ததே.

அதற்குப் பதிலளித்து ஜெயலலிதா விடுத்த இன்னொரு அறிக்கையில் — ''விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தும் சாத்தியம் பற்றி ஆராயும்படி அமைச்சர் சவான் என்னிடம் கேட்டுக்கொண்டதாக நான் கூறியது உண்மையே'' — என்றும் தெரிவித்திருக்கிறார்.

(இ-எ)

# சென்னாரெட்டி நியமனம் எதிர்க்கட்சிகள் வரவேற்பு

சென்னை, மே 25

தமிழக ஆளுநராக டாக்டர் சென்னாரெட்டி நியமிக்கப்பட்டதை மாநில எதிர்க்கட்சிகள் வரவேற்றுள்ளன.

திரு. பீஷ்மநாராயணசிங் ஆளுநர் பதவியை ராஜினாமாச் செய்தது துரதிஷ்டவசமானது என்றாலும், புதிய ஆளுநராக சென்னா ரெட்டி நியமிக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது என்று தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி தெரிவித்தார்.

மாநில நிர்வாகத்தின் மீது ஆளுநருக்கு இருக்க வேண்டிய கட்டுப்பாடு திரு. பீஷ்மநாராயணசிங்குக்கு இல்லாது போய் விட்டது என்றும்—

விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் காவலில் இருந்து தப்பிச்சென்ற நிகழ்ச்சிகள் பற்றி அவர் அலட்சியம் காட்டினார் என்றும்—

இந்திரா காங்கிரஸ் எம். பி. திண்டிவனம் இராமமூர்த்தி தெரிவித்தார்.

திரு. பீஷ்மநாராயணசிங்கின் ராஜினாமாக் குறித்து தாம் மகிழ்ச்சி அடைவதாக தி. மு. க தலைவர் மு. கருணாநிதி தெரிவித்தார்.

முன்னாள் அ. தி. மு. க. அமைச்சரும் தமிழக நல்லாட்சி இயக்கத் தலைவர்களில் ஒருவருமான திரு. க. ராஜாராம், பீஷ்மநாராயணர் சிங்கை மாற்ற வேண்டும் என்று தமது இயக்கம் பல முறை கேட்டுக் கொண்டது என்று தெரிவித்தார்.

# உதவி பெறுவோர் விவரம் பார்வைக்கு

கோப்பாய், மே 25

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் வீடமைப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 5 ஆயிரம் பெறுவதற்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ள 15 குடும்பங்களின் பெயர்ப்பட்டியல் கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பணிமனையினால் வெளியிடப்பட்டு பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. (இ-72)

# அரசியல் மாற்றத்தால் சமாதான வாய்ப்புகள்

## கென்னத் கூறுகிறார்

கொழும்பு, மே 25

அரசியல் ரீதியாக ஏற்பட்டுள்ள புதிய மாற்றங்கள் சமாதானத்துக்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தியுள்ளன.

இவ்வாறு அங்கிலிக்கன் திருச்சபை மேற்றிராணியார் கென்னத் பெர்னாண்டோ கூறினார்.

கென்னத் பெர்னாண்டோ சில மாதங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம் வந்து சென்றதும்—

அப்போது விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனைச் சந்தித்ததும் தெரிந்தவையே.

# உவராவதை தடுக்க மண் அணை

கோப்பாய், மே 25

கோப்பாய் - கைதடி கடலுக்கு சமீபமாக அமைந்துள்ள கைதடி விவசாய நிலங்கள் உவர் நிலமாக மாறுவதைத் தடுப்பதற்காக கைதடி மேற்கு கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த மக்கள் மண் அணை ஒன்றைக் கட்டியுள்ளனர். (இ-72)

## மானிப்பாய், நவாலி பகுதிகளில்

# நிலக்கடலைப் பயிரில் புதுவித நோய்த் தாக்கம்

அராலி, மே 25

அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் மானிப்பாய், நவாலி பகுதிகளின் பயிரிடப்பட்ட நிலக்கடலைப் பயிர்கள் புதுவிதமான நோயினால் பாதிக்கப்பட்டுள்ளன.

விவசாயத் திணைக்களத்துடன் விவசாய ஆராய்ச்சிப் பகுதியுடனும் தொடர்பு கொள்ளப்பட்டதை அடுத்து பாதிக்கப்பட்ட பயிர்களின் மாதிரிகள் விவசாய ஆராய்ச்சிப் பகுதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. ஓரிரு நாட்களுள் நோயைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

(இ-12)

# யோகாசன கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மே 25

அகில இலங்கை சர்வமத யோகாசன ஸ்தாபனம் நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் மாதாமாதம் நடத்தும் கருத்தரங்கில் எதிர் வரும் 30ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3-30 மணிக்கு ''யோகமும் ஆளுமை வளர்ச்சியும்'' எனும் பொருள் பற்றி வண. பிதா எஸ். டேமியன், யோகி ராஜன், யோகாசன கலாநிதி சுவாமி ஸ்ரீ சிதானந்த சரஸ்வதி யோகி முதலியோர் கருத்துரை வழங்குவார்கள். (க)

# வல்லையில் உப்பு விளைச்சல்

வல்லை வெளியில் இம்முறையும் உப்பு விளையத் தொடங்கியுள்ளது. ஆனால் இந்த தடவை மக்கள் உப்பு அள்ளுவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டுகளிலும் இப்பகுதியில் உப்பு பெருமளவு விளைந்ததும், அதனை அள்ளுவதற்கு மக்கள் முண்டியடித்ததும் குறிப்பிடத்தக்கது.

கொக்குவில் ஸ்ரீ இராம கிருஷ்ண சாரதா மகளிர் வித்தியாலயம்


## பழைய மாணவர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம்

மேற்படி சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் 03 - 06 - 1993 பிற்பகல் 4-00 மணிக்கு நடைபெறும். பழைய மாணவர்கள் அனைவரையும் தவறாது வருகை தருமாறு வேண்டுகின்றேன்.

அதிபர்.

(6207)

## 5 ஆம் வருட நினைவலைகள்



அமரர்

### முருகேசு சண்முகரெட்ணம் (தயா)

(பங்காளர் - சுபமாலா மோட்டஸ்)

அன்புத் தீபம் ஒளிவீசியது: 03 — 06 — 1956

அக்கினியில் கலந்தது: 19 — 05 — 1988

திதி: 25 — 05 — 1993

நெஞ்சங்களின் எரிமலைகள் இங்கு
நீறுபூத்து எரியும் நெருப்புத் தானோ
வஞ்சகர் கரங்களினால் - மதவாச்சியில்
வாடிய செந்தாழம் பூவிதழோ.

இனியவனே உன் வரவிற்காக காத்திருக்கும்:
மனைவி, பிள்ளைகள், பெற்றோர்,
சகோதர,. சகோதரிகள்.

249, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

(25806)

## மரண அறிவித்தல்கள்

### பாலாம்பிகை குகராசன்

காரைநகர் வேம்படியைச் சேர்ந்த திருமதி பாலாம்பிகை குகராசன் 21 - 05 - 93 இல் கனடாவில் அகால மரணமானார்.

அன்னார் குகராசனின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான டாக்டர் தர்மலிங்கம், கனகாம்பிகை தம்பதிகளின் ஆசை மகளும், முல்லைப்புலவு காரைநகரைச் சேர்ந்த இளைப்பாறிய உத்தியோகத்தர் மகாதேவா - செல்வமலர் தம்பதிகளின் அருமை மருமகளும், கோமளாம்பிகை, ரவிச்சந்திரன் (லண்டன்), தவச்சந்திரன் (லண்டன்), பாலச்சந்திரன் (பிரான்ஸ்), ஞானச்சந்திரன், (லண்டன்) ஆகியோரின் ஆருயிர்ச் சகோதரியும், சச்சிதானந்தா (ஓமான்), யோகராசா (கனடா), மகாலட்சுமி, புஷ்பராணி ஆகியோரின் அன்பு மைத்துனியும், வைஷேகியின் அருமைச் சித்தியுமாவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி. யோகலிங்கம்

திரு. ஜெயசிங்கம் மேற்பார்த்து,
வட்டு - மேற்கு,
வட்டுக்கோட்டை.

(6206)

### திருமதி லிங்கேஸ்வரி பரமேஸ்வரன்

திருமதி லிங்கேஸ்வரி பரமேஸ்வரன் 24-05-93 இல் காலமானார்.

அன்னார் திரு. கு. பரமேஸ்வரனின் (ஜேர்மனி) அன்பு மனைவியும், திரு. மா. வேலுப்பிள்ளை, காலஞ்சென்ற திருமதி நேசரத்தினம் அவர்களின் அன்பு மகளும், காலஞ்சென்ற திரு. சி. குமாரசாமி, திருமதி குமாரசாமியின் அன்பு மருமகளும், தவனேஸ்வரி, நாகேந்திரம் (டென்மார்க்), சுசிலாதேவி (டென்மார்க்), சாரதாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும், யோகேஸ்வரன் (இளைப்பாறிய வான்படை உத்தியோகத்தர்), சிறீ முருகன் (டென்மார்க்), விமலராணி (டென்மார்க்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

இறுதிக் கிரியைகள் 25-05-93 அன்று காலை 8 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வழுக்கையாறு மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திரு. யோகேஸ்வரன்

சங்கரத்தை,
வட்டுக்கோட்டை.

(6210)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

## நிர்க்கதியான பெண்கள் வாழ...

உழைப்பாளரை இழந்த பெண்களின் புனர்வாழ்வுக்கான செயற்திட்டங்களை இனங்காணுவது சம்பந்தமாகக் கடந்த வாரம் கொக்குவிலில் கருத்தரங்கு ஒன்று நடைபெற்றது.

உழைப்பாளரை இழந்த பெண்களில் உதவி தேவைப்படும் பிரிவினரை முன்னுரிமைப்படுத்துதல், புனர்வாழ்வுக்கான செயற்திட்டங்களை இனங்காணுதல் ஆகிய பல பயனுள்ள விடயங்கள் அந்தக் கருத்தரங்கில் விரிவாக ஆராயப்பட்டன.

யுத்தத்துக்கு முந்திய, இராணுவ அடடூழியங்கள் தமிழ் மண்ணில் தலையெடுப்பதற்கு முந்திய, இயல்பு நிலைக்காலத்தின்போது இயற்கைக் காரணங்களால் கணவரை இழந்த விதவைகள் மட்டுமே பாதிக்கப்பட்டனர். தந்தையை இழந்த பிள்ளைகள் மட்டுமே பாதிக்கப்பட்டனர். அவர்களின் எண்ணிக்கையும் மிகச் சுமாராகவே இருந்தது.

ஆனால் இன்றோ இராணுவ வன்செயல்களால் உழைப்பாளர்களை இழந்தவர்கள், இராணுவ நடவடிக்கைகளால் குடும்பத் தலைவர்களை இழந்தவர்கள், தாய் தந்தை இருவரையும் இழந்து தவிக்கும் இளம் மகளிர் என்று நிர்க்கதிக்குள்ளான பெண்களின் எண்ணிக்கை மிக ஏராளமாகி விட்டது. அது மட்டுமா? உழைப்பாளர்களாக இருந்த பெண்கள் ஆயிரக்கணக்கில் உழைப்பை இழந்து அகதிகளாகி வீண் பொழுது போக்குவதால் மனித வளம் விரயமாகிறது. அதனையும் கருத்தில் கொள்ள வேண்டும்

அகதிகள் புனர்வாழ்வுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது போலவே, உழைப்பாளர்களை இழந்த பெண்களுக்கு வாழ்வளிக்க வேண்டிய தேவையும் முதன்மை பெற்றுவிட்டது.

வெறும் தற்காலிக நிவாரணங்கள், குறுகிய கால புனர்வாழ்வுத் திட்டங்கள் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு போதிய பொருளாதாரப் பாதுகாப்பையும், வாழ்க்கை விருத்தியையும் தரமாட்டா. மேலும் எமது சமூகக் கட்டமைப்பில் பெண்களின் நிலையைக் கருதியும் அவர்களுக்குரிய புனர்வாழ்வுப் பணிகளை விசேடமாகத் திட்டமிடவேண்டிய தேவையுமுண்டு.

மொத்தத்தில் நிர்க்கதியான பெண்களுக்கு வளமான எதிர்காலத்தை அமைக்கவல்ல புனர்வாழ்வுத் திட்டங்கள் இனங்காணப்பட்டு, நீண்டகால நன்மை விளைவிக்கும் வகையில் அவை செயற்படுத்தப்பட வேண்டும்.

இது இன்றைய சமூகக் கடமைகளில் முதன்மைபெற வேண்டிய ஒன்றாகும். தொண்டர் நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் இது விடயத்தில் ஒன்றிணைந்து செயற்படுவது மட்டுமன்றி எல்லா நிறுவனங்களும்சேர்ந்து ஒன்றிணைந்த திட்டங்களை அமுல்படுத்த முனைவது வரவேற்கத்தக்க ஒன்றாகும்.

இந்த நிறுவனங்களின் புனர்வாழ்வுத் திட்டங்கள், உதவிகள், உழைப்பை இழந்த பெண்களுக்கு உழைப்பை உருவாக்கி, அவர்களை உழைப்பாளிகளாக மாற்றவேண்டும். அப்போதுதான் அவர்களும், அவர்தம் பிள்ளைகளும், உறவினரும் தத்தமது சொந்தக் கால்களிலேயே நின்று வாழ முடியும். பாதிப்பை மறந்து பின்னடைவின்றி சமூக நீரோட்டத்தில் சேர்ந்து பயனுள்ள பிரசைகளாக வாழ இயலும்.

## ஆலய உற்சவங்கள்

நல்லூர் தெற்கு, ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயத்தின் முதலாவது கொடியேற்றம் நாளை புதன்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும். 11 மணிக்கு சுவாமி வீதி வலம் வந்து அருள் பாலிப்பார்.

எதிர்வரும் 3 ஆம் திகதி தேர்திருவிழா இடம்பெறும். உற்சவ நாட்களில் தினமும் இரவு 8.30 மணிக்கு செல்வன் ச. மணிமாறன் ''பெரிய புராணம்'' என்னும் பொருளில் சொற்பொழிவு நிகழ்த்துவார். (ஒ)

o o o

பந்துவில் ராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று செவ்வாய் காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும். (த-117)

o o o

பளை தம்பகாமம் முர்த்து மாரி அம்பாள் ஆலய மணவாளக்கோல உற்சவம் இன்று செவ்வாய் நடைபெறும். இன்றைய தினம் ''பவளக் கொடி'' புராண நாடகமும் நடைபெறும். (த 117)

o o o

கந்தரோடை அருள்மிகு ஸ்ரீ அருளானந்தப் பிள்ளையார் கோவில் வருடாந்த உற்சவம் இன்று காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறும் (த-13)

o o o

அளவெட்டி அருள்மிகு கும்பழாவளை பிள்ளையார் கோவில் உற்சவம் இன்று பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. (த-13)

o o o

சாவகச்சேரி நுணாவில் மேற்கு விளைவேலி மருதடி விநாயகர் கோவில் வருடாந்த மகோற்சவம் நாளை புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. (த-117)

o o o

அச்செழு போயிட்டி சித்தி விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் நாளை புதன்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. எதிர்வரும் 3 ஆம் திகதி வியாழக்கிழமை ரதோற்சவமும் மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறும்.

o o o

சுன்னாகம் மயிலணி திருக்குடவாயில் ஸ்ரீ விஸ்வநாத கோவில் வருடாந்த உற்சவம் இன்று செவ்வாய் காலை 8.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். (த-89)

o o o

திருவண்ணை நகர் அருள்மிகு வாலாம்பிகா சமேத விசுவலிங்க வைத்தீஸ்வர சுவாமி கோவிலில் (வண்ணை சிவன்) நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு சேக்கிழார் குருபூசை நடைபெறும். அன்றைய தினம் சேக்கிழார் புராண படனம், உபந்நியாசம் விசேட பூசை ஆகியவை இடம்பெறும். (த)

o o o

வட்டுக்கோட்டை மேற்கு சின்னக்கதிர்காமம் முருகன் ஆலய வருடாந்த மஹோற்சவம் நேற்று ஆரம்பமாகியது. அடுத்த மாதம் இரண்டாம் திகதி தேர்த்திருவிழா இடம்பெறும். வைகாசி விசாகதினமான 3 ஆம் திகதி தீர்த்தோற்சவமும் அதனை அடுத்து அன்னதானமும் நடைபெறும். (அ)

o o o

மாவை கொல்லங்கலட்டி அருள்மிகு ஸ்ரீ வீரகத்திப் பிள்ளையார் கோவில் வருடாந்த மஹோற்சவத்தை ஒட்டி 140 பருத்தித்துறை வீதி யாழ்ப்பாணத்தில் நாளை முதல் அடுத்த மாதம் 4 ஆம் திகதிவரை தினமும் மாலை 5 மணிக்கு கண[illegible] இடம்பெறும். பஜனையும் நடைபெறும். (அ)

o o o

கோப்பாய் வடக்கு ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி கோவிலின் வருடாந்த உற்சவம் நாளை புதன்கிழமை ஆரம்பமாகி நடைபெறும். (க-72)

o o o

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ ஞானப்பழனி முருகன் தேவஸ்தானத்தின் மஹோற்சவம் இன்று பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது

o o o

கொக்குவில் ஸ்ரீ கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் (புதுக் கோவில்) வருடாந்த மகோற்சவம் நாளை புதன் காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. 03 - 06 - 1993இல் தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். தினமும் மாலை 6-45 — 7-45வரை திரு ஆறு திருமுருகன் பெரியபுராண விரிவுரை நிகழ்த்துவார். (க-69)

o o o

வல்வெட்டி வேவில் வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த உற்சவம் நாளை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது அடுத்த மாதம் 3ஆம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

உற்சவ தினங்களில் திரு. இ. ஜெயராஜ் அவர்களின் சொற்பொழிவு தொடர்ந்து நடைபெறும். (க)

o o o

உரும்பராய் பர்வத வர்த்தனி அம்மன் வருடாந்த திருவிழா நாளை புதன்கிழமை கொடியேற்றத் திருவிழாவுடன் ஆரம்பமாகின்றது.

03-06-93 வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும் 04-06-93 வெள்ளிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (க-154)

o o o

கொழும்புத்துறை மேற்கு ஸ்ரீவதரிபீட விநாயகர் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் நாளை புதன்கிழமை காலை 10மணிக்கு, கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி அடுத்த மாதம் 3ஆம் திகதி தேர்த் திருவிழாவும் 4ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

மகோற்சவ காலத்தில் தினமும் மாலை 5மணிக்கு திரு. ஆர். திருமுருகன் ''பெரிய புராணம்'' தொடர் விரிவுரையை நிகழ்த்துவார்.

o o o

அத்தியடி ஸ்ரீ சிதம்பர நடராஜ வீரகத்திப்பிள்ளையார் கோவிலில் இன்று செவ்வாய் கிழமை சதுர்த்தி உற்சவம் கொண்டாடப்படும். பிற்பகல் 4 மணிக்கு அபிஷேகப் பூசை நடைபெற்று 5 மணிக்கு வசந்தமண்டபப் பூசையைத் தொடர்ந்து விநாயகப் பெருமான் உள்வீதி உலா வருவார். (க)

## நாளை

ப. நோ. கூ. சங்கத் தலைவர்கள், பொது முகாமையாளர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை புதன் கிழமை காலை 9 மணிக்கு யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. (உ-3)

## கப்டனாக அஸாருதீன்

எதிர்வரும் ஜூலை மாதம் இரண்டாம் வாரத்தில் இலங்கைக்கு விஜயம் செய்யவிருக்கும் இந்திய கிரிக்கெட் அணியின் கப்டனாக முகமது அஸாருதீன் மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார்.

உதவிக் கப்டனாக சச்சின் டெண்டுல்கர் நியமிக்கப்பட்டுள்ளார். (க)

## விளையாட்டு நிகழ்வுகள்

''உதயன்'' நிறுவனத்தின் ஆதரவுடன் யாழ்ப்பாணம் றோட்டறக்ட்கழகம் நடத்தும் — ஏழு பேர் கொண்ட அணிகளுக்கிடையிலான — வருடாந்த ஹொக்கிச் சுற்றுப் போட்டி யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் நேற்று ஆரம்பமானது.

இன்று மாலை நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு:

பிற்பகல் 3.00 மணிக்கு:- ஷப்றா அணி எதிர் ஓல்ட் கோல்ட்ஸ் ''ஏ'' அணி

3.45 மணி:- யாழ். பல்கலைக்கழக கூட்டு அணி எதிர் ஓல்ட் கோல்ட்ஸ் ''பி'' அணி.

4.30 மணி;- யாழ். பல்கலைக் கழக நீல அணி எதிர் கிறாஸ் கொப்பர்ஸ் வெள்ளை அணி.

o o o

''உதயன்'' கிண்ணத்திற்காக பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் பருத்தித்துறை திக்கமுனை மைதானத்தில் நடத்தி வரும் — ஏழு பேர் கொண்ட அணிகளுக்கிடையிலான — உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை நடைபெறும் ஆட்டத்தில் உதய தாரகை அணியை எதிர்த்து கண்ணகி வி. க. அணி மோதும்.

o o o

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவை, ''உதயன்'' நிறுவனத்தின் ஆதரவுடன் கழகங்களுக்கிடையில் நடத்தி வரும் — ஆண்கள் பிரிவு, பெண்கள் பிரிவுகளுக்கான — வருடாந்த கூடைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டிருக்கின்றன.

எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் கழக அணிகள் விண்ணப்பங்களை அனுப்பவேண்டும் என்றும் —

யாழ். பல்கலைக்கழக உடற்கல்விப் பிரிவில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

o o o

சுன்னாகம் மயிலணி வளர்பிறை விளையாட்டுக் கழகம் நடத்தும் — 9 பேர் கொண்ட அணிகளுக்கிடையிலான — உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை சுன்னாகம் சிங்கமாப்பாணர் மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் மோதும் அணிகள் வருமாறு:-

★ யாழ். திருநகர் பாரதி வி. க. அணி எதிர் சுன்னாகம் ஸ்கந்தா ஐக்கிய வி. க. அணி.

★ காங்கேசன்துறை யங் றோயல் வி. க. அணி எதிர் அளவெட்டி விநாயகர் வி. க. அணி.

[உ]

## அரசமைப்புச் சட்ட மாற்றம் குறித்து சொக்ஸி கருத்து

அரசமைப்புச் சட்டத்துக்குத் தேவையான மாற்றங்களை முதலில் கண்டறிய வேண்டும்

அரசமைப்பு மற்றும் ராஜாங்க அலுவல்கள் விவகார அமைச்சர் திரு. கே. என். சொக்ஸி முன்கண்டவாறு தெரிவித்தார்.

''எமது நாட்டின் தற்போதைய அரசமைப்பு 15 வருடங்கள் பழைமை வாய்ந்தது.

எனவே மாறிவரும் கால கட்டத்துக்கு ஏற்ப அதனை மாற்றி அமைக்கவே விரும்புகின்றோம்.

விருப்பு வாக்குகள் விஷயமும் மீளாய்வு செய்யப்பட வேண்டும்''—

இப்படி அவர் கூறினார்.

### பங்களா ஒன்றிலிருந்து

## 17 குழந்தைகள் பொலிஸாரால் மீட்பு

கொழும்பு, மே 25

குருநாகல் நகர மத்தியில் உள்ள ஆடம்பரமான இரு மாடிகளைக் கொண்ட பங்களா ஒன்றில் இருந்து பசி வாட்டத்துடன் காணப்பட்ட 17 குழந்தைகளை கடந்த சனிக்கிழமை மாலை பொலிஸார் மீட்டனர்.

ஒன்று முதல் 7 வயதுக்கு உட்பட்ட இக்குழந்தைகள் அந்த பங்களாவில் மர்மமான முறையில் வைக்கப்பட்டிருந்தனர்,

இக்குழந்தைகளின் தாய்மாருக்கு வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பெற்றுக் கொடுத்த பின்பு, அவர்களிடம் இருந்து உரிய பணம் வந்து சேரும் வரை இக்குழந்தைகள் பிணையாக வைக்கப்பட்டிருந்தனவா?

அல்லது குழந்தைகளை விற்பனை செய்யும் பண்ணையாக இது நடத்தப்பட்டதா?

இது பற்றி பொலீஸார் தற்போது ஆராய்ந்து வருகின்றனர். (இ-எ)

## இரத்த அமுக்கத்தினால் இருதய வீக்கம் ஏற்படுகிறது

### கருத்தரங்கில் உரை

''இரத்த அமுக்கத்தால் இருதய வீக்கம் ஏற்படுகிறது. இரத்த அமுக்கம் அதிகரிக்க சிறுநீரகம் பாதிக்கப்படுகிறது. நாம் இரத்த அமுக்கத்தைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும்.''

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக புறநிலைப் படிப்புகள் அலகு வழங்கும் சுகவாழ்வு பொது விரிவுரைத் தொடரில் வைத்திய கலாநிதி எம். கே. முருகானந்தம் மேற்கண்டவாறு கூறினார்.

''உயர் இரத்த அமுக்க நோயும் இருதய நோயும்'' எனும் பொருள் பற்றி அவர் உரையாற்றினார்.

யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் யாழ். உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சுந்தரம், டிவகலால தலைமையில் இக் கருத்தரங்கு நடைபெற்றது.

வைத்திய கலாநிதி முருகானந்தம் மேலும் பேசுகையில், ''இரத்த அமுக்கத்தைக் கட்டுப்படுத்த புகைத்தலை அடியோடு நிறுத்த வேண்டும்; உணவில் கொழுப்புப் பொருள்களையும், மாப் பொருள்களையும் குறைக்க வேண்டும்; உப்பின் பாவனையைக் குறைக்க வேண்டும்; மதுபானம் அருந்துவதை நிறுத்த வேண்டும்; தினசரி உடற் பயிற்சியிலும் தியானம் முதலியவற்றிலும் ஈடுபட வேண்டும்'' என்று குறிப்பிட்டார். (க)

பரீட்சை...

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்தமுடிவுகள் இன்று பரீட்சார்த்திகளுக்கு அனுப்பிவைக்கப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. [உ-3]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அராலிக் கண்ணி வெடி: பகிரங்க விசாரணை

அராலி கண்ணி வெடித்தாக்குதல் சம்பவம் பற்றிய விசாரணையை சர்வதேச ஆணைக்குழு பகிரங்கமாக நடத்தவிருக்கிறது.

பத்திரிகைகள் மூலம் இச்சம்பவம் பற்றிய தகவல்களைக் கோரவும் ஆணைக்குழு முடிவு செய்துள்ளது.

இச்சம்பவத்தில் ஜெனரல் டென்ஸில் கொப்பேகடுவ உட்பட 10 படை அதிகாரிகள் கொல்லப்பட்டனர் என்பது தெரிந்ததே. (இ-எ)

## நரசிம்மராவுக்கு எதிராக

# காங். அதிருப்தியாளர்கள் மீண்டும் தீவிரப்போக்கு

புதுடில்லி, மே 25

அண்மையில் நடந்த சட்டசபை இடைத்தேர்தல்களில் இந்திரா காங்கிரஸ் படுதோல்வி அடைந்ததைத் தொடர்ந்து இந்திரா காங்கிரஸ் கட்சிக்குள் அதிருப்தியாளர்கள் மீண்டும் தங்கள் நடவடிக்கைகளை தீவிரப்படுத்தி உள்ளனர்.

இவ்வாறு புதுடில்லிச் செய்திகள் தெரிவித்தன

அயோத்தியில் பாபர் மசூதி இடிக்கப்பட்ட சம்பவம் குறித்து இந்திய அரசு மன்னிப்புக் கோரவேண்டும் என்று கோரி, மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர் அர்ஜுன் சிங் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

முஸ்லிம் மக்களின் நம்பிக்கையை காங்கிரஸ் மீண்டும் பெறவேண்டும் என்றால், அது பாபர் மசூதி இடிக்கப்பட்டமைக்கு மன்னிப்புக் கேட்டேயாகவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

அர்ஜுன் சிங்கின் இந்த அறிக்கை பிரதமர் நரசிம்மராவை இலக்காகக் கொண்டு வெளியிடப்பட்டிருக்கிறது என அவதானிகள் கருதுகின்றனர்.

அடுத்த வாரம், ராஜீவ் காந்தியின் தொகுதியான அமேதியில் காங்கிரஸ் செயற்குழுவின் கூட்டமும் மாநாடும் நடைபெறவுள்ளன. அங்கே அயோத்திப் பிரச்சினையை அர்ஜுன் சிங் எழுப்பலாம் என்று அவதானிகள் எதிர்பார்க்கின்றனர்.

இதனால் அமேதிக் கூட்டத்தில் அர்ஜுன் சிங்குக்கும் நரசிம்மராவுக்கும் இடையே இன்னுமொரு தடவை மோதல் இடம்பெறப்போகிறது என அவதானிகள் கருத்து வெளியிட்டனர். [உ-எ]

# துஷ்பிரயோகம் குறித்து அரசு விசாரிக்கும்

அரச நிறுவனங்களில் கடந்த காலங்களில் இடம்பெற்றதாகக் கூறப்படும் வீண்விரயம், துஷ்பிரயோகங்கள், மோசடிகள் மற்றும் முறைகேடுகள் குறித்து விசாரணை நடத்த அரசாங்கம் முடிவு செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-எ)

# வயல்களில் இரவு நேரம் நிலக்கடலை திருட்டு

அராலி, மே 25

நவாலி, மானிப்பாய் பகுதிகளில் பயிரிடப்பட்டுள்ள நிலக்கடலை, முற்றுவதற்கு முன்னரே இரவு நேரங்களில் திருடப்பட்டு வருகின்றனவாம்.

அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தின் உதவியுடன் இப்பகுதியில் 50 ஏக்கர் பரப்பளவில் நிலக்கடலை உற்பத்தி செய்யப்பட்டு, கால் ஏக்கருக்கு ஈராயிரம் ரூபா வீதம் 200 விவசாயிகளுக்கு கடனும் வழங்கப்பட்டிருந்தது.

கடன் பெற்றுப் பயிர் செய்தவர்கள் தமது கடனைத் திருப்பிச் செலுத்த முடியாத நிலைமை ஏற்படலாம் என்று அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

# புனர்வாழ்வு உதவியால் உழைப்பு உருவாக வேண்டும்

## திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர் பேச்சு

''உழைப்பாளரை இழந்த பெண்களின் புனர்வாழ்வுக்காக நாம் வழங்கும் உதவியால் உழைப்பாளியையும் உழைப்பையும் உருவாக்க வேண்டும். இவ்வாறுதான் இப் பெண்களின் வாழ்க்கைத் தரத்தை நாம் உயர்த்த முடியும்''

கொக்குவில் தமிழர் புனர்வாழ்வுக் கழகக் கலந்துரையாடல் மண்டபத்தில் கடந்த 19ஆம், 20ஆம் திகதிகளில் நடைபெற்ற 'உழைப்பாளரை இழந்த பெண்களின் புனர்வாழ்வுக்கான செயற்திட்டங்களை இனங்காணுதலு''க்கான ஆய்வுப்பட்டறையின் தொகுப்பை 20ஆம் திகதி மாலை வழங்கிய திட்டமிடல் பிரதிப்பணிப்பாளர் திரு இ. ம. செல்வின் இவ்வாறு கூறினார்.

அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் திரு. க. கணேசலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அவர் மேலும் பேசுகையில் ''வன்முறையால் உயிரிழந்தோரின் மனைவிமார் மட்டும் யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்கள் என்று கூறுவதற்கில்லை. இந்த மண்ணில் வாழும் உழைப்பாளரை இழந்த பெண்கள் அனைவருமே யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்கள் ஆவர்'' என்று கூறினார்

20ஆம் திகதி இரண்டாம் நாளாக நடைபெற்ற ஆய்வுப் பட்டறையில் ''தமிழ்ப் பிரதேசங்களில், சமூக அமைப்புக்கும் பிரதேசங்களுக்கும் ஏற்ப வேலைத் திட்டங்கள் முழுமையாக அமைய வேண்டிய வழிமுறைகளை இனங்காணுதல்'' எனும் பிரச்சினையை அறவழிப் போராட்டக் குழுச் செயலாளர் திரு. க. ஜீவகதாஸ் அறிமுகம் செய்து வைத்தபின் பிரதிநிதிகள் குழுநிலைக் கலந்துரையாடல்களை நடத்தினார்கள்.

அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தைச் சேர்ந்த 15க்கு மேற்பட்ட ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளும், அரச உத்தியோகத்தர்களும் ஆய்வுப் பட்டறையில் பங்குபற்றினார்கள்.

அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவிகள் முன்னுரிமை அடிப்படையில் தக்கவர்களைச் சென்றடைய வழி காணுதல் வேண்டும் என்பது இந்த ஆய்வுப் பட்டறையில் வலியுறுத்தப்பட்டது. (க)

# ஜனாதிபதியுடன் சந்திப்பு

அராலி கண்ணிவெடித் தாக்குதலில் லெப்டினன்ட் ஜெனரல் டென்ஸில் கொப்பேகடுவ மற்றும் மூத்த இராணுவ அதிகாரிகள் கொல்லப்பட்டது தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ள பொதுநல அமைப்பு நாடுகளின் நீதியரசர் குழு ஒன்று கொழும்பு வந்திருப்பது தெரிந்ததே.

இந்தக் குழுவினர் நேற்று ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கவைச் சந்தித்துப் பேசினர்.

ஆறுவாரத்தில் அவர்கள் தமது விசாரணையைப் பூர்த்தி செய்வர் எனத் தெரிவிக்கப்பட்டது

## சிறுவருக்கு உதவி

ஐந்து வயதுக்கு உட்பட்ட 16,304 சிறுவர்களுக்கு யாழ். மறைவட்ட மனிதமுன்னேற்ற நடுநிலையம் (கியூடெக்) பால்மா உணவுப் பொருள்களை வழங்கி வருகிறது.

ஆசனக்கோவில், குருநகர் அடைக்கல நாயகி ஆலயம், உரும்பராய், சில்லாலை, மாரீசன்கூடல், சாவகச்சேரி, உடுவில், கோப்பாய், நவாலி, பண்டத்தரிப்பு, சந்தியோமையோர் ஆலயம் ஆகிய பங்குகள் ஊடாக மாதாமாதம் நடுநிலையம் பால்மா வகைகளை வழங்கி வருவதாக நிலைய நிவாரணப் பிரிவு அதிகாரி திரு. ஞா அருளானந்தம் தெரிவித்தார். (இ-51)

## சிறையில்..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவரது சுயேச்சைக் குழுவின் சார்பில் மாகாண சபைக்குத் தெரிவு செய்யப்பட்ட ஒரேயொரு உறுப்பினர் அவரே.

தொழிலாளர் தேசிய யூனியன் கட்சியின் சார்பில் போட்டியிட்ட ரி. ஐயாத்துரையும் 4 ஆயிரத்து 262 விருப்பு வாக்குகளுடன் மாகாண சபைக்குத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்.

நுவரெலியா மாவட்டத்திலிருந்து மத்திய மாகாண சபைக்குத் தெரிவு செய்யப்பட்ட பத்து ஐ.தே.க. உறுப்பினர்களில் எண்மர் தமிழர் என்பது குறிப்பிடத்தக்கது

ஐ.தே.க. பட்டியலில் விருப்பு வாக்குகளின் அடிப்படையில் மூன்றாம் பத்தாம் இடங்களைப் பெற்ற இருவரைத் தவிர ஏனைய எண்பரும் தமிழர்கள் ஆவர்.

சுயேச்சைக் குழுவின் சார்பில் போட்டியிட்டு வெற்றியீட்டிய பி. சந்திரசேகரன் தற்போது சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

கூட்டுப்படைத் தலைமையகம் மீதான வெடிகுண்டுத் தாக்குதலின் சூத்திரதாரி எனக் கருதப்படும் வரதனுக்கு புகலிடம் கொடுத்தார். என்ற சந்தேகத்தின் பேரில் சந்திரசேகரன் கைது செய்யப்பட்டார் என்பது தெரிந்ததே.

## சட்டசபையை .

(1 ஆம் பக்க தொடர்ச்சி)

என எதிர்பார்க்கப் படுகிறது.

தீர்ப்பு தனக்கு எதிராகப் போய், தான் எம் எம் ஏ. பதவியையும், அதன் மூலம் முதல்வர் பதவியையும் இழக்க நேரிட்டால்—

தனது அ தி மு. க. கட்சியைத் சேர்ந்த — பெரும் எண்ணிக்கையான — சட்ட மன்ற உறுப்பினர்கள் பிரிந்து போய், காங்கிரஸுடன் சேர்ந்து, புதிய முதல்வர் ஒருவரைத் தெரிவு செய்து, புதிதாக ஆட்சி அமைக்கக்கூடும் என ஜெயலலிதா அஞ்சுகிறார்.

அதனாலேயே சட்ட சபையைக் கலைத்து, தேர்தலை நடத்தி அத்தேர்தல் மூலம் மீண்டும் ஆட்சிக்கு வர ஜெயலலிதா விரும்புவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ-எ)

# யாழ். குடா ஏரியில் 4 பொதுமக்கள் பலி?

மணிலா, மே 25

கடந்த புதனன்று யாழ். குடா ஏரியில் பயணம் செய்த பொதுமக்கள் மீது ஸ்ரீலங்காப் படையினர் நடத்திய தாக்குதலில் நான்கு பொதுமக்கள் உயிரிழந்தனர்

யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியாவுக்கு வந்த தமிழ் மக்கள் இத்தகவலை தெரிவித்ததாக வெரித்தாஸ் வானொலி அறிவித்தது.

அன்றைய தினம் குடா ஏரியில் படையினருக்கும் புலிகளுக்கும் இடையில் மோதல் இடம்பெற்றதாகவும் வெரித்தாஸ் வானொலி அறிவித்தது. [உ-த-6]

## மாத்தறை மாவட்டத்தின்

# வாக்குகளை மீள எண்ண கோரி நீதிமன்றில் மனு

## தாக்கல் செய்ய எதிரணி முடிவு

கொழும்பு, மே 25

மாகாண சபைத் தேர்தலின் போது மாத்தறை மாவட்டத்தில் அளிக்கப்பட்ட வாக்குகளை மீண்டும் எண்ணுமாறு கோரி பொதுமக்கள் ஐக்கிய முன்னணி நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் இல்லத்தில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டது.

மாகாண சபைத் தேர்தலின் போது மாத்தறை ராகுல மகாவித்தியாலயம் வாக்கு எண்ணப்படும் நிலையங்களில் ஒன்றாக இருந்தது.

அவ்வித்தியாலயத்தின் மலசல கூடப்பகுதியிலும், மற்றும் இடங்களிலும் வாக்குச் சீட்டுகள் கண்டெடுக்கப்பட்டன

ராகுல வித்தியாலய வாக்குகள் எண்ணப்படும் நிலையத்தில் போதிய பாதுகாப்பு இருக்கவில்லை என்றும்— அதிகாரம் அளிக்கப்படாதவர்களும் அங்கே செல்வதற்கு வாய்ப்பு இருந்ததென்றும்—

மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திரு. கே. ஏ. சிறிசேனா தெரிவித்தார்.

கண்டெடுக்கப்பட்ட வாக்குச் சீட்டுகள் பத்திரிகையாளருக்கும் காண்பிக்கப்பட்டன.

வாக்குச் சீட்டுகள் கண்டெடுக்கப்பட்டது குறித்து தேர்தல் ஆணையாளருக்கும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. இது குறித்து விசாரணை நடத்தப்படுவதாக அவர் கூறியுள்ளார்.

வாக்குச்சீட்டுகள் கண்டெடுக்கப்பட்டதால் வாக்கு எண்ணுவதில் குளறுபடி நடந்திருக்கலாம். அதனால் மாத்தறை மாவட்டத்தில் மீண்டும் வாக்குகளை எண்ணுமாறு நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்போவதாக எதிர்க்கட்சியினர் அறிவித்துள்ளனர். [அ-6]


# மரண அறிவித்தல்

## தம்பையா இலட்சுமணசாமி

(ஆசிரியர் - சில்லாலை R.C T.M.S.)

பண்டத்தரிப்பு அம்மன் வீதியைச் சேர்ந்த த. இலட்சுமணசாமி ஆசிரியர் 24-5-93 இல் காலமானார். அன்னார் காலஞ்சென்ற தம்பையா - நாகரத்தினம் தம்பதியின் அன்பு மகனும், காலஞ்சென்ற நாகமணி செல்லம்மா தம்பதியின் அன்பு மருமகனும், மகாலட்சுமியின் (ஓய்வுபெற்ற ஆசிரியை) அன்புக் கணவரும், சஞ்சீவன் (பரியோவான் கல்லூரி), சஞ்சயன், சங்கீதா ஆகியோரின் பாசமிகு தந்தையும், கண்மணி, பூபதி, நடராசா (C.T.B. முல்லைத்தீவு), பாக்கியம் (ஆசிரியை), தியாகராசா, கந்தசாமி, மனோகரன், இராஜமனோகரி ஆகியோரின் அன்புச் சகோதரரும் N. S. தெய்வேந்திரம் (கொழும்பு), மகேந்திரன் (ரக்வானை), தேவதாஸ் (ஜேர்மனி), லோகேந்திரலிங்கம் (கனடா), சிவராமன் (வேலணை பி.சபை), ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 25-5-93 செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு திருநெல்வேலி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் திருநெல்வேலி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்:

நாவலடி ஒழுங்கை, நா. சிவராமன்

திருநெல்வேலி மேற்கு. [25809]

## நாகலிங்கம் தயாபரன்

லக்சுமி பேக்கரி, சந்நதி வீதி, அச்சுவேலியைச் சேர்ந்த நாகலிங்கம் தயாபரன் நேற்றிரவு காலமானார்.

அன்னார் நாகலிங்கம் — சுமித்திராதேவி ஆகியோரின் சிரேஷ்ட புதல்வனும், சுகன்யாவின் அண்ணனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வல்லை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

யோ. சதானந்தன்

(25811) (மாமன்)


மேலும் மரண அறிவித்தல்கள் 6ஆம் பக்கத்தில்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 25 - 05 - 1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org